# புதிய தரிசனம் 2



ஓக்ரோபர் 2003

கலை, இலக்கிய, சமூக
அறிவியல் சஞ்சிகை.

20/=

நெல்லை மண்ணில் எல்லை இல்லாத
இன்னிசை மழையில் நனைய வைக்கும்
துன்னிகர் இல்லாத நிறுவனம்

# லவ்லி ரெக்கோடிங் சென்ரர்


# Lovely Recording Centre

சிற்றுண்டி வகைகளையும், சிந்தை குளிர்விக்கும்
நற்றிறம் வாய்ந்த ஐஸ்கிறீம் வகைகளையும்
சுகாதாரமுடனும், சுவையுடனும் வழங்குவதில்
நிகரின்றி விளங்குவது



# லவ்லி கூல் பார்

# Lovely Cool Bar



மற்றும்

வாகனப் பதிவுகளையும்,
யாழ் – கொழும்பு வாகன சேவைகளையும்
வழங்கிவரும்

## உயர் நிறுவனம்

# ஆசிரியரின் பேனா முனைப் பார்வையிலிருந்து..........

**ஆசிரியர் குழு**
த. அஜந்தகுமார்
பா.செந்தூரன்
சு. க. சிந்துதாசன்
கி. அ. தில்லைதாசன்
ஜெ. ஐங்கரதாசன்
சி. சிவகுமார்.
சி.திருச்செந்தூரன்
**கௌரவ ஆசிரியர்**
இரா.அகிலன்
**ஓவியர்**
ஸ்ரீ நடராஜா
**விளம்பரத்தொடர்பு**
மா. சத்தியேந்திரா
**விற்பனைத்தொடர்பு**
இ. அரவிந்தன்
ம. பிரசாத்

**சகல தொடர்புகளுக்கும் ''பிரதம ஆசிரியர்'' புதியதரிசனம் சஞ்சிகை, வதிரி, கரவெட்டி.**

வாசக நெஞ்சங்களே............

முதலாவது இதழிற்கு நீங்கள் தந்த திரண்ட ஆதரவுக்கு நன்றியுடையோமாய் இரண்டாவது இதழில் உங்களைச் சந்திப்பதில் ஏக மகிழ்ச்சி.

கலை இலக்கியம் என்றாலே ஏதோ வேண்டாத ஒன்றென்று ஒதுக்கித் தள்ள முனையும் அறியாமைத்தனம் உள்ளோர் ஒருபுறமும், கலை இலக்கியம் என்றால் உயிர் என்று நினைத்து அரவணைத்துக் கைலாகு தருவோர் மறுபுறமும் இருக்கையில், எத்தடைவரினும் அத்தடை உடைத்து இத்தரை தன்னில் முத்திரை பதிப்போமென்று புதுச் சத்தியமொன்று செய்து வீறுடன் பயணிக்கும் எங்கள் புதிய பயணம் பூக்கள் மீது நடப்பதல்ல என்று எமக்கு தெரியும். இருந்தும் இந்த இலக்கிய முயற்சியில் களமிறங்கி இருக்கிறோம். எங்களின் இலக்கும் சத்தியமும் சாத்தியம் ஆவதற்கு அனைவரும் ஆக்க பூர்வமாய் ஆதரவு தரவேண்டும். எங்களுக்கு இருக்கின்ற நம்பிக்கைதான் எதையும் துணிவுடன் தூக்கிச் செய்யத்தூண்டும் தும்பிக்கையாய் உருமாறியிருக்கிறது.

சிறியவர்கள் நடாத்துகின்ற சிற்றிதழ் தானே என்று சிறுமைக்குள் இருக்காது படைப்பாளிகளும், வாசகர்களும் புதிய தரிசனம் மீதும் தங்கள் பார்வையைத் திருப்பி கனமான படைப்புகளின் களமாக புதிய தரிசனம் உருவெடுப்பதற்கு உறுதுணையாய் நிற்க வேண்டுகின்றோம்.

இனிவரும் இதழ்களில் பல மெருகேறல் களோடு உங்களைச் சந்திப்போம் என்கின்ற நம்பிக்கை நமக்குண்டு.

**"தோழமை என்றால் தோள் கொடுப்போம்**
**தோதில்லை என்றால் பேனாமுனை வாள் எடுப்போம்"**

மறு இதழில் உங்களைச் சந்திக்கும் வரை

***பிரதம ஆசிரியர்***



வாழ்த்துரை
ஏகலைவன் ஆசிரியர்
இ. சு. முரளிதரன்



வரவேற்புரை
சு. க. சிந்துதாசன்



அறிமுகவுரை
இரா. அகிலன்



தலைமையுரை
த. சிதம்பரப்பிள்ளை

**புதிய தரிசன
வெளியீட்டு விழா
காட்சிகள்
13.07.2003**



வெளியீட்டுரை
குப்பிளான்
ஐ. சண்முகன்



நன்றியுரை
கி.அ.தில்லைதாசன்



ஆய்வுரை
ஆ. கந்தையா



ஏற்புரை
புதிய தரிசன பிரதம ஆசிரியர்
த. அஜந்தகுமார்



ஆய்வுரை
இ. இராஜேஸ்கண்ணன்

# ஒற்றைப் பாதசரம்



வதிரி இ.இராஜேஸ்கண்ணன்.

மூன்று நாட்கள் நடந்து முந்த தொடர் சண்டைக்குப் பின்னர் இன்றுதான் கெஞ்சம் ஓய்வு இருந்தது. காதைத்து ளைத்துப் போகும் சாரை சாரையான வேட்டொலிகள் எட்டமொன்றாய் அடுத் தடுத்து வீழுந்து வெடிக்கும் எறிகனைகள், வானை வறளவைக்கும் குண்டுவீச்சு விமான ஒலிகள்.

உயிரை வரளவைக்கும் உஷ்ணக் காற்றால், உணர்வுகள் சிறுதுளிராய் சாவதா வாழ்வதா என முகிழ்த்து முகிழ்த்து இதய ஓரத்தில் புதைநந்துபோக, பாலைவனத்து எரிமலையாய் வெறுமையின் சூனியத்தில் எண்ணங்கள் கொப்பளித்து வெளிவர நெஞ்சசோடு துப்பாக்கியை அணைத்தபடி மரத்தோடு சாய்ந் திருந்தான் சந்திரன்.

"அக்கா அவளும்அம்மாவும் எங்கை போச்சினமோ தெரியாது. ஒருவேளை எங்கடை மாமா வீட்டை போயிருப்பினமோ''

சந்திரனின் மனதில் இந்தக் கேள்வி எழவே பசுக்கன்று ஒன்று எவ் உயிர்வரை கேட்க உரத்து அழும் ஒசை காதினில் கரைந்தது.

திடீரென ஏதோ ஞாபகம் வந்தவனைப் போன்று தன்னுடைய காற்சட்டைப் பையை தடவினான்.

''நல்லகாலம், இருக்கு. நான் நான் எங்கையேனும் விழுந்துகிழுந்து போச்சுதோ எண்டு நினைச்சன்.''

என்று எண்ணியவாறே அந்த ஒற்றைப் பாதசரத்தினை எடுத்து உயிரை கண்ணில் வைத்து பார்த்தவாறு நிலைத்துப் போனான்.

"டேய், கலை என்னடாப்பா யோசினை. நல்லாத்தான் யோசிக்கிறாய். என்னவிசயம்''

எங்கோ விண்வெளியில் பறக்க முயன்றவனை வழமைக்குக் கொண்டு வந்தான் அமுதன்.

சந்திரனுக்கு இப்போது கலை வேந்தன் தான் பெயர். சுருக்கமாக அவனை ''கலை'' என்றுதான் கூப்பிடுவது வழக்கம். உண்மையிலே அவனொரு தனிரகமான கலைதான் என்பது அவனது நடத்தைகள் ஒவ்வொன்றிலும் வெளிப்பட்டு நிற்கும்.

''கலை, என்னடா அக்கா

அவையளையும், அம்மாவையும் பற்றி யோசிக்கிறியோ. பயப் படாதையடா அவை பாதுகாப்பாக இருப்பினம் தானே. சிலவேளை நாங்களே இன்னுங் கொஞ்ச நாளிலை சந்திக்கிற நிலையும் வரலாம் தானே"

என்று கூறிக் கொண்டே தன்னுடைய துப்பாக்கியை துண்டு துண்டாய் கழற்றித் துடைக்க தொடங்கினான் அமுதன்.

நேற்றுச் சண்டை நடந்த கிழக்குக் கரை கிராமத்தில் தான் "கலையின்" சகோதரிகளும் தாயும் வாழ்ந்து வந்தார்கள். அட்டகாசம் ஆரவாரங்கள் இல்லாத சிறு வீடு. முற்றத்தில் இரண்டு பெரிய மாமரம். பின்வளவில் பத்துப் பதினைந்து தென்னைமரம் கிழக்குபுற வேலிக்கும் வீட்டுக்கும் இடையே ஒரு புறாக்கூடு முன் இடுகுவேலி வாயிலே மல்லிகைபந்தல். குடத்தடியில் என்றும் தண்ணீர் குறையாத திருகணையில் வைக்கப்பட்ட மண்பானை வீட்டின் முன்னே வெண்மணல் நிரப்பப்பட்ட சவுக்கண்டி..................

அத்தனையும் அப்படியே இருந்தனை கண்ட சந்திரனுக்கு அம்மாவும் அக்காக்களும் இல்லாது அந்த வீடு உயிரற்றுக் கிடப்பதை எண்ணி குழறி அழதுதீர்க்க வேண்டும் போல இருந்தது.

"அமுதன் இஞ்சை பாரனடா அந்த பாதசரத்தைத் தான் காட்டினான்.

"டேய் ...... என்னடா பாதசரம் ஆற்றையடா..... எங்கை எடுத்தனி......"

அமுதன்..... இது எங்கடை சின்னக்காவின்ரை பாதசரமடா..... புறாவித்த காசிலை நான்தானடா அவளுக்கு இதைச் செய்து கொடுத்தனான். சோடியாக செய்து கொடுத்தன் இப்ப ஒற்றை தான் கிடக்கு. நேற்றைக்கு எங்கடை வீட்டை உள்ளட்ட நேரம் இது கிடைச்சுதடா......... அக்கா அவளள்........?

சந்திரன் ஏதோதோ விபரீத எண்ணங்களை மனதில் வளர்த்துக் கொண்டான்.

"கலை சும்மா சொல்லக் கூடாது நல்ல வடிவான பாதசரம்தான்ரா கலை ஒரு கலைதான்ரா"

தானே ஒரு டிசைன் கீறி தமக்கைக்கு பாதசரம் செய்வித்தது இன்னும் நினைவில் அவனுக்கு இனித்தது..........

"அமுதன்......... எங்கடை அப்பா நான் சின்னனா இருக்கேக்கையே செத்துப் போனார். அம்மா...... பாவமடா....... அம்மா தான் எங்களை எல்லாம் வடிவாக வளத்தவ.

ரீச்சரா வாறதுக்கு அம்மாவின்ரை முயற்சி தானடா முழுக்காரணம். நான் ஒரு பெடியன் எண்டதாலை அவளள் என்னில் நல்ல அன்பு, மூத்தக்காள் எங்கட குடும்பத்தில் இன்னும் கலியானம்

கட்டாமல் இருக்கிறதை நினைச்சால் கவலையடா........என்ன செய்கிறது. நான் வீட்டாலை வெளிக்கிட்டு ஆறுவரிசமாச்சுது இன்னும் ஒருநாளும் அம்மாவின்ரை முகத்தை பாக்கவில்லை.....நேற்று வெறும் வீட்டைப் பாக்க என்ரை மனம் என்னபாடுபட்டது தெரியுமே?

அமுதனுக்கு சந்திரனின் ஏக்கம் நல்லாகப் புரிந்தது. ''கலை....... கவலைப்படாதையடா இன்னும் எத்தினை நாளைக்கு ''. ''அமுதன் .....உனக்கென்னடா தெரியும் நேற்று நான்பட்டபாடு, எங்கடை வீட்டு குடத்தடியிலை ஒரு நேரமும் குளிர் தண்ணிக்கு குறைவே இருக்கிறதில்லை நேற்றுத்தான் தண்ணிவிடாயில ஓடிப்போய் குடத்தை திறந்தன் வெறுங்குடமடா''....

''அமுதன்.......அந்தக் குடமே ஒரு பெரிய கதையடா..... அம்மாவும் அப்பாவும் கலியாணம் முடிச்சு முதலாவது பொங்கலுக்கு பொங்கல் வைக்க வாங்கின மண்பானை அது இவ்வளவு வரிசமாக அதை பராமரிச்சு வைச்சிருக்கிறா எண்டால் பாரன். எங்கடை மூத்தக்காவின்ரை வயசு முப்பது இப்ப.....''

என்று சொன்ன சந்திரனின் மனத்துள் தாயை எண்ணி ஒருவகைப் பெருமிதம்.

''டேய்..... அமுதன் என்ரை அக்கா அவளள் பொம்பிளையளா இருந்து இவ்வளவு நாளும் எவ்வளவு கஷ்டப்பட்ருப்பாளள். இடம் பெயர்ந்து சனமெல்லாம் அந்தப்பக்கம் வரேக்கநான் எந்தநாளும் போய்ப்போய் அம்மாவும் அக்காள அவளளும் வந்தினமோ எண்டு பார்த்து பார்த்து அலைஞ்சவன் அழைத்தவன் ஆனால் எங்கடை சொந்தக்காரர் நிறையப்பேர் அங்காலை வந்தும் அம்மா, அக்கா அவளள் வரேல்லை என்றால் என்ரை மனம் என்ன பாடுபட்டிருக்கும் பதிலுக்காக காத்திராது சந்திரன் தொடர்ந்தான்.

"அமுதன் என்ரை சின்னக்கா அவள்தான்ரா என்னிலை நல்ல அன்பு. எனக்கு புத்தி தெரிந்த காலத்தில் இருந்து சின்னக்காவை தான் எல்லாம் பள்ளிக்கூடம் போனால் என்ன இரவிலை படிச்சால் என்ன சாப்பிட்டால் என்ன அவதான் நான் பாதசரம் எடுத்துக் கொடுத்ததிலை. இருந்துநான் வீட்டை விட்டு வெளிக்கிடும் வரையிலை ஒருநாளும் அதை அவள் தன்ரை காலிலை இருந்து கழற்றவே இல்லை. ஆனால் இப்ப ...... எப்படி?......... சின்னக்காவிற்கு எதும்?

*சீச்சீ* ....... என்னடா விசர் சிந்தனை உப்படி எல்லாம் ஏன்? நெகடிவ்வா யோசிக்கிறாய் ...''

ஆம்பிளையள் துணை இல்லாமல் அம்மா எப்படி எல்லாம் கஷ்ரப்பட்டிருப்பா? மாமரத்திலை குருவிச்சசை பிடிச்சிருக்கிற மாதிரியை பார்க்க.........? அம்மாவினை கையாலே சோறு திண்டு சரியா ஆறு வருசமும் நாலு மாதமும் ஆச்சடா ............

அமுதன் கதையை திசை திருப்ப முயன்றும் சந்திரன் விட்ட பாடு இல்லை..........

"அமுதன் ........... இன்டைக்கு பின்னேரம் நானும் நீயும் ஒருக்கால் எங்கடை வீட்டைப் பார்த்துக் கொண்டு வருவமே உதிலை அந்த ஒழுங்கையிலை தானே?

அமுதனுக்கு சந்திரனின் மனதை கௌவிய ஆதங்கமும் துயரமும் நன்றாகவே புரிந்தது. அவன் கேட்டதிற்கு சம்மதித்தாற் போல் தலையை அசைத்துக் கொண்டான் அமுதன்

''டேய்....... சந்திரன் வழமையாக பின்னேரம்தான் நாங்கள் வெளிக்கிடவேண்டிவாறது. அப்படி ஒன்றும் இல்லை. எண்டால் உதிலை பக்கத்தை போட்டு ஒடிவரலாம்.''என்று அமுதன் சொல்லவும் அந்த வெடியோசை கேட்கவும் சரியாக இருந்தது.

பாதசரம் சந்திரனின் காற்காட்டை பொக்கேற்றினுள் போகவே நெஞ்சோடு சாய்ந்த துப்பாக்கி கம்பிரமாக கடுகதியில் கையுக்கு வந்தது.

சந்திரனின் உள்ளம் அவன்வீட்டின் புறக்கூடாகவும்..... குடத்தடியின் மண்பானையாகவும் ........ மாமரத்துக்குருவிச்சையை வெட்டியகற்றும் ஆதங்கம் மனதிலே குமிழ்விட.....

மீண்டும் ஓர் சண்டைக்காக அவர்கள்.......

டிசம்பர் 2000

## கவிதைப் போட்டி 2

வாசக நெஞ்சங்களே......

இந்த இதழின் அட்டைப் படத்தை ஆழமாக நோக்கி அந்தப் படம் உங்களுக்குத் தருகின்ற சிந்தனையைக் கவிதை வடிவில் ஆக்கி (4 வரிக்குள்) எமக்கு அனுப்பி வையுங்கள். பரிசு பெறும் கவிதைக்கு ரூ.150 பரிசளிக்கப்படும், பாராட்டுப் பெறும் 10க் கவிதைகளும் இடம் பெறும்.

முடிவுத்திகதி-28.11.2003

முகவரி - கவிதைப் போட்டி2
பிரதம ஆசிரியர்
புதிய தரிசனம் சஞ்சிகை
வதிரி
கரவெட்டி,

# செம்மணி.



இந்த மண் சரித்திரம். எதிரிகள் கட்டிய
செந்தமிழ் தேசத்தின் சிவப்பு தாஜ்மஹால்
கந்தகக் கற்புடன் கண்ணகி புதைந்ததும்
செந்தழல் பரப்பிய சாம்பலின் சாகரம்
ரணங்களின் உறைவிடம் ராணுவ ரகசியம்
பிணங்களின் கழிப்பறை பிழைகளின் தாயகம்
முத்தமிழ் தேசத்தின் மொகஞ்ச தாரோ
புத்தனைக் கொன்றபின் போதி மரங்கள்
நித்திய பூஜை நிகழ்த்திய ஆலயம்
புத்திர சோக புது அஞ்சல் முகவரி
வன்முறை நாவலின் வரலாற்றுப் பக்கம்
புண் சுமந்திசைக்கும் புல்லாங்குழல் மண்
சதைகள் புதைந்தது சரித்திரமானதால்
விதைகள் ஆயிரம் விருட்சமாய் எழுந்தன
படுகுழி உடல்களில் பற்றிய அக்கினி
விடுதலை யாகத்தில் வேள்வித் தீ யானது.

எலும்புகள் விதைத்த எமனது வயல்கள்
தழும்புகள் மறைந்த தமிழரின் விடுகதை
பாலியற் கொடுமையின் படிமச் சிற்பம்
காளி கூழ் ஆடிய கலிங்க தேசமே....!
உக்கிரப் போரின் ஊமை பாஷையே....!
வக்கிர உணர்வின் வாடகை வீடே !
எத்தனை படிமம் எடுத்துரைத் தென்ன?
நித்திய மரண நீசமண் புகழது
ஆதி சேடன்தன் ஆயிரம் நாவினால்
தேதி வாரியாய் செப்பினும் முடியுமா....?
உறங்கும் உண்மைகள் உயிர்த்தெழுந்திடுமா
விறகொடு போனவை வெளிவரக் கூடுமா....
செம்மணிச் சாம்பலில் உறங்கும் எரிமலை
விம்முமா....? வெடிக்குமா....? வேடங்கலைக்குமா....?

உச்சிக்கிழான்

## - பொலிகையூர் - கலாபூஷணம்
## வே.க.பாலசிங்கம் -

பாரம்பரியக் கலைகளின் புனிதத் தன்மையைப் புறந் தள்ளுகின்ற போக்குகளும், நவீன நாகரிகங்கள் என்கின்ற பெயரில் மேலைத்தேய கலைகளின் மீதான மோகங்களும் அதிகரித்திருக் கின்ற இந்தச் சூழ்நிலையில் பாரம்பரியக் கலைகளை இன்னமும் கட்டிக் காக்கின்ற நல்ல உள்ளங்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அந்த வகையிலே அவர்களைக் கௌரவப்படுத்தும் நோக்கில் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையிலே 2000ம் ஆண்டிற்குரிய கலாபூஷண விருது பெற்றவர்களில் திரு.வே.க.பாலசிங்கம் ஒருவராவார்.




முக்கியமான இசை நாடகக் கலைஞரான இவர் நாடகத்துக்குப் பல பணிகளைச் செய்துள்ளார். இன்று 73 வயதிலும் கூட முதிரா இளமைத் துடிப்போடு நாடகத்தில் நடித்தும் வருகின்றார். பாரம்பரியக் கலைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் இசைநாடகப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவும் திட்டத்தில் இருக்கும் இந்தக் கலைஞருக்கு சகல தரப்பினரும் ஆக்கமும் ஊக்கமும் நல்க வேண்டும்.

பண்ணிசைச் செல்வர்,முத்தமிழ் வித்தகர், கலை மகிழ்நன்,இசை நாடக மாமணி, கலைவாருதி,இயலிசை நாடகச் செல்வர், கலாபூஷணம், ஆயகலை வித்தகர் என்ற பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்ற கலாபூஷணம் அவர்களைப் புதிய தரிசனத்துக்காக நேர்கண்ட போது.......

✪ **கலைஞர் அவர்களே தங்களின் நாடகக்கலைப் பிரவேசம் பற்றிக் கூற முடியுமா?**

நான் 7 வயதுச் சிறுவனாய் இருக்கும் போது எனது பேரனாரில் ஒருவராகிய அமரர் புதியவன் நீலர் அவர்கள் எனது குரல் வளத்தைக் கேட்டு

தமது மகனாகியவரும் எனது நாடக வழிகாட்டியுமாகிய அமரர் நீ.செல்லக்கண்டு அவர்களிடம் என்னைப்பற்றிக் கூறிப் " பபூன் " வேடத்தினைப் பெற்றுத் தந்தார். அதன் பின் அவரது மூத்த மகனாகிய அமரர் நீ.கணபதிப்பிள்ளை அவர்களின் நெறியாள்கையில் உருவான "காத்தான் கூத்து" என்ற சிந்து நடைக்கூத்தில் பால காத்தவராயனாக நடித்தேன். அதன் பின் அமரர் நீ.செல்லக்கண்டு அவர்கள் தயாரித்தளிக்கும் ஒவ்வோரு நாடகத்திலும் ஏதாவதொரு கதா பாத்திரம் எனக்கு வழங்கப்படும். அந்த வகையிலே அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகமன்ற ஆரம்பக் கர்த்தாவாகிய அமரர் நீ.செல்லக்கண்டு அவர்களை எனது குருவாக ஏற்றுக் கொண்டுள்ளேன். அன்று

தொடக்கம் இன்று வரை நாடகங்களில் நடிப்பதை நான் விட்டுவிடவில்லை.

✪ கலாபூஷணம் அவர்களே, தாங்கள் நடிக்கும், நெறியாள்கை செய்யும் நாடகங்களில் எப்படிப்பட்ட இசைகளைப் பயன்படுத்துகின்றீர்கள்?

நல்ல கேள்வி. நான் நடித்த நாடகங்களிலும் சரி, என்னால் எழுதப்பட்டு நெறியாள்கை செய்த நாடகங்களிலும் சரி கூடுதலாக கர்நாடக இசையினையே பயன்படுத்தி வந்துள்ளேன். நான் 7 வயதில் நடித்த "பாமா விஜயம்" என்ற நாடகத்தில் " பபூனாக " வந்து நடிக்கும் போதுகூட கர்நாடக இசையிலமைந்த பாடலையே பாடி நடித்துள்ளேன். அன்றைய மக்கள் கர்நாடகம் இசைக்கக் கூடிய ஒருவரைத்தான் நாடக நடிகனாகக் கருதினர். கர்நாடக இசை முறையினையே அந்த மரபுவழி முறையினையே நானும் பின்பற்றிப் பாடி, நடித்து வருகின்றேன்.

✪ கர்நாடக இசையினை நாடகங்களில் புகுத்துவது பற்றி இன்னும் கொஞ்சம் விபரமாகக் கூறமுடியுமா?

கூறமுடியும்.19ம் 20ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள நாடகக் குழுவினர் இசை நாடகங்களை வளர்த்து வந்தனர். நாடகத் தந்தை என்று பலராலும் அழைக்கப்படுகின்ற அறிஞர் பம்பல் சம்பந்த முதலியார், நாடகத் தலைமை ஆசிரியராக விளங்கிய தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் கர்நாடக இசையினையே தாம் எழுதிய நாடகங்களில் புகுத்தியுள்ளனர். தமிழ் நாட்டில் கர்நாடக இசைத் துறையில் பிரபல்யம் பெற்றிருந்த ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராசபகவதர், ஜி.எஸ். கிட்டப்பா, டி.ஆர்.மகாலிங்கம், கே.பி.சுந்தராம்பாள், எம்.எம்.தண்டபாணி தேசிகர், p.u. சின்னப்பா போன்றோர் கர்நாடக இசையினையே தமது நாடகங்களில் புகுத்தினர்.

திரையுலகையும் சற்றுத் திரும்பிப் பார்ப்போமானால் இசைத்துறையில் புகழ்பெற்ற ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராச பாகவதர், நடிகமணி p.u. சின்னப்பா, கொத்தமங்கலம் சீனு, எம்.எஸ். சுப்புலக்சுமி, அஸ்வத்தம்மா, சந்தானலட்சுமி, நடிப்பிசைப்புலவர் கே.ஆர்.ராமசாமி, பி.எஸ்.கோவிந்தன் ஆகியோரும் கர்நாடக இசை மூலம் பாடி நடித்த பின்பே திரையுலகிற்கு வந்தனர். புராண,இதிகாச, வரலாற்று இலக்கிய நாடகங்களில்

கர்நாடக இசைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

தென்னிந்திய சில இசைநாடகக் கலைஞர்கள் இலங்கையில் வந்து இசைநாடகங்களை மேடையேற்றினர். நல்ல வரவேற்பையும் மதிப்பையும் பெற்றனர். அதன் பின் இலங்கையில் இசைஞானத்தோடு நடிப்புத்திறன் கொண்ட சிலர் இசைநாடகத் துறையில் ஆர்வம் காட்டி கர்நாடக இசையில் பாடி நடித்துப் பெரும்புகழ் ஈட்டினர். தென்னிந்தியக் கலைஞர்கள் வெட்கித்தலை குனியும் அளவிற்கு இலங்கையிலும் யாழ் குடாநாட்டுக் கலைஞர்கள் பாடி நடித்தனர், அத்துடன் தென்னிந்திய சில இசைநாடகக் கலைஞர்கள் எமது நாட்டுக் கலைஞர்களை தமது நாடகங்களில் இணைத்து நடித்துள்ளனர்.

குடா நாட்டு நடிகர்களில் திறமைமிக்கவர்களாய் வி.வி.வைரமுத்து, ச.ச.தம்பியையா, m.p.அண்ணாச்சி, v.k. இரத்தினம், s.நற்குணம், k. ஐயாத்துரை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

✪ கலைஞர்

*"தென்னிந்தியக் கலைஞர்கள் வெட்கித்தலை குனியும் அளவிற்கு இலங்கையிலும் யாழ் குடாநாட்டுக் கலைஞர்கள் பாடி நடித்தனர்."*

அ ன ் றை ற ய நாடகங்களுக்கும் இன்றைய நாடகங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைக் கூற முடியுமா?

நல்ல கேள்வி. அன்றைய நாடகங்கள் நீண்ட நேரம் அதாவது முழு இரவும் நடைபெற்று வந்ததனால் காட்சிகளுக்கு இடையே இடைவெளிகள் காணப்பட்டன. இதனால் மக்கள் அதாவது பார்வையாளர்கள் சலிப்புற்றும் வெறுப்புற்றும் காணப்பட்டனர். சில பார்வையாளர்கள் நித்திரையாகி விடுவதும் உண்டு. ஆனால் இன்றைய நாடகங்கள் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் நடைபெறுவதனால் சுவைஞர்கள் அனைவரையும் ஈர்த்துக் கொள்ளக் கூடிய வகையிலேயே நடைபெறுகிறது. இன்று நாடக உத்திகள், நாடக அளிக்கை முறைகள் நன்கு முன்னேறி இருப்பதனால் அன்றைய நாடகங்களில் இருந்த நலிவான அம்சங்கள் களையப்பட்ட நிலையிலேயே இன்றைய நாடகங்கள் நடைபெறுகின்றன.

✪ நாடகங்களின் பொதுவான நோக்கம் எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்?

நாடகங்களின் பொதுவான நோக்கம் மகிழ்வூட்டலாக இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையில் நாடகங்களுக்கு ஊடாக ஏதோவொரு படிப்பினையை அளிக்க வேண்டும் என்பதே நாடகங்களின் குறிக்கோளாக இருக்க

வேண்டுமென நான் விரும்புகிறேன்.

✪ நாடகங்கள் மூலம் நன்னெறியைப் புகுத்தமுடியும் இது பற்றித் தங்கள் கருத்தினைக் கூறுவீர்களா?

நாடகங்கள் மூலம் நன்னெறியைப் புகுத்த முடியும் என்பதற்கு ஒரு சில உதாரணங்களைக் கூறலாம். சாதாரண காந்தியாக இருந்த காந்தியடிகள் அவர்களை உலகம் போற்றும் உத்தமராக்கியது "அரிசச்ந்திரா" என்ற நாடகமாகும். பொதுவாக நாடகங்களில் நன்னெறிப் பாத்திரங்களை புகழ்வதும்,வஞ்சனை நிறைந்த பாத்திரங்களை வெறுப்பதனையும் காண முடிகிறது. 90 களில் " **பூதத்தம்பி** " என்ற நாடகத்தில் வஞ்சக நெஞ்சம் கொண்ட அந்திராசியை மக்கள் வெறுப்பதையும், கடவுள் பக்தியும்,நல்லொழுக்கமும் கொண்ட பூதத்தம்பி மீது மக்கள் பச்சாதாபப்படுவதையும் காண முடிகிறது. எனவே மக்கள் வில்லன் போன்ற பாத்திரங்களை வெறுப்பதும், சாதுவான நிலையிலுள்ள பாத்திரங்களை வரவேற்பதிலிருந்தும் மக்கள் நன்னெறிகளைத்தான் விரும்புகிறார்கள் என்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே நாடகங்கள் நாம் எதிர்பார்த்தபடி நன்னெறிகளைப் புகுத்த ஒரு நல்ல ஊடகம் என்று தான் சொல்ல வேண்டும்.

✪ கலைஞரே! நாடக வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்க முடியாத சில அனுபவங்களைக் கூற முடியுமா?

தங்களின் ஆவலைப் பூர்த்தி செய்கிறேன். 60களில் பதவி மோகம் என்ற நாடகம் ஆனையிறவு உப்பளப்பகுதியில் மேடை ஏற்றப்பட்டது. ரசிகர் கூட்டம் நிரம்பி வழிந்தது. பல கிராமத்து மக்களும் அங்கு வந்திருந்தனர். நாடகம் மேடையேற்றப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றது. ரசிகர் கூட்டம் சீட்டி அடித்தும், கைதட்டியும் ரசித்தவண்ணம் இருக்கின்றனர்.

நாடகம் ஒழுங்கு செய்த பெரியாருக்கு என்னையோ எமது குழுவினரையோ தெரியாது. ஆறு ஏழு காட்சிகள் நடந்து முடிந்து விட்டன. நான் மேடையில் தனிமையில் நின்று பாடி நடித்துக் கொண்டிருக்கையில் அவசர அவசரமாக ஓர் அன்பர் மேடைக்கு வந்து எனது கையைப் பிடித்துக் குலுக்கி விட்டு பட்டாடை ஒன்றினால் என்னைப் போர்த்துக் கௌரவித்தார். இதுவே எனது நாடக உலகின் முதல் கௌரவிப்பு ஆகும். அவர் என்னை அவ்வாறு கௌரவித்தமைக்குக் காரணம் எனது நடிப்பும் இசைவளமுமே ஆகும்.

**"பதவிமோகம்"** என்ற நாடகத்தில் வரும் இன்னுமோர் காட்சி, கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் இடையில் வாட்போர் நடக்கிறது. கதாநாயகனின் உதட்டை வில்லனின் வாள் பதம் பார்க்கிறது. உதட்டினால் இரத்தம்

வழிந்தோடுகின்றது. அதனையும் பொருட்படுத்தாது வாட்போர் நடக்கிறது. கதாநாயகனுடைய் வாள்வீச்சு வில்லனின் கைவிரல்களைப் பதம் பார்த்தது. இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது. வாட் போரில் தோல்வி அடைந்த வில்லன் பின்வாங்கி ஓடுகின்றான். இது நாடக வாழ்வில் மறக்க முடியாத காட்சி ஆகும்.

''சமூகவிரோதி'' என்ற நாடகத்தில் சகோதரர்களுக்கு இடையில் சண்டை நடக்கிறது. அண்ணன் கதாநாயகன் வாளினை வீசிக் கொண்டு தம்பியாராகிய வில்லனை நாடி ஓடி வருகின்றான். உணர்ச்சி வசப்பட்ட அண்ணனின் வாள் வீச்சில் நின்றும் தப்புவதற்காக கதிரை ஒன்றினை தூக்கிப்பிடித்தவாறு வாள்வெட்டுக்களில் நின்றும் தப்பிவிடுகின்றான். நாடகவரலாற்றில் இக்கட்டம் பெரியதொரு பயங்கரக் கட்டமாகும். இதில் கதாநாயகன் தர்மசீலனாக ஆரியகுளம் நடேசு அவர்களும், தம்பி உக்கிரமசீலனாக(வில்லன்) வே.க.பாலசிங்கமாகிய நானும் நடித்துள்ளோம். வில்லன் பாத்திரமேற்று நடிக்கும் போது முதியோரில் இருந்து சிறியோர் வரை மேடைக்கு முன் இருந்தவாறு " வாறான் முளியன்,வாறான் கள்ளன், கெட்டவன் வாறான் " என்று கூறியதோடு மண்ணால் அள்ளி எறிந்த அனுபவமும் உண்டு.

இன்னுமோர் அனுபவத்தைக் கூறியே ஆகவேண்டும். ''பதவிமோகம்'' நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. ரசிகர்களோடு ரசிகர்களாய் எனது தாயாரும் நாடகத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டு இருக்கிறார். எனது அட்டகாசமான நடிப்பில் லயித்துப் போயிருந்த பல பெண்கள், எனது தாயார் இருப்பதையும் கவனியாது அறுவான்,பிரளுவான்,பெண்களுக்கு இப்படி உதைக்கலாமோ? அடிக்கலாமோ? கேடுகெட்டவன் அநியாயக்காரன், அக் கிரமக்காரன், பெண்பித்து பிடித்தவன் என்றெல்லாம் வாயில் வந்தபடி ஏசினர். தூற்றினர்.எனது தாயாருக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால் ஒன்றும் பேசமுடியவில்லை.

> *மக்கள் ஆவேசப்படும் அளவிற்கு நடிப்பதில்தான் திறமை இருக்கிறது.*

விடிந்ததும் தாயார் என்னை அழைத்து அருகில் இருத்தி என் தலையை வருடியவாறு, " துரை " (எனது வீட்டுப்பெயர்) இனிமேல் நீ நாடகம் நடிக்க வேண்டாம் என்றார். ''ஏனெனனை ஆச்சி'' என்றேன். நாடகம் நடிக்க விருப்பமென்றால் நல்ல பாத்திரத்தில் நடி. இந்த வில்லன் பாத்திரம் வேண்டாம் என்றார். நான் சிரித்தேன். ஏன் துரை சிரிக்கிறாய் என்றார். உந்தப் பெண்கள் பேசிய பேச்சு உனக்கெப்படி தெரியும் என்றார்.ஆச்சி! மக்கள் ஆவேசப்படும் அளவிற்கு நடிப்பதில்தான் திறமை இருக்கிறது. எனக்கூறி எனது தாயாரைச் சமாதானப் படுத்தியுள்ளேன்.

இன்னுமோர் அனுபவத்தைக் கூறித்தான் ஆக வேண்டும்.

**"கன்னிக்கோட்டை"** என்ற நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. முக்கிய பாத்திரமான மன்னன் மணிமாறன் என்ற பாத்திரத்தில் நடிக்கின்றேன். மணிமாறன் தீயபழக்கங்களைக் கொண்டவன். நாளொரு புதிய கன்னியரைத் தன்காமப்பசிக்கு உள்ளாக்கி வருகிறான். இளம் பெண்கள் புடைசூழ அவர்கள் மத்தியில் நின்று அவர்களுடன் சல்லாபம் புரிகின்றான். இந்தக் காமாந்தகாரனின் கழுகுக் கண்களில் ஏழைச்சிற்பி கந்தப்பா என்பவரின் மகள் சியாமளா அகப்படுகிறாள். அவளைத் தன் படுக்கையறைப் பதுமையாக்கி அவளின் கற்பைச் சூறையாட எத்தனிக்கிறான். இதனை மணிமாறனின் தாய் கேள்விப்படுகிறாள். மன்னன் சியாமளாவிடம் செல்வதற்காக தன்னை அலங்கரித்துக் கொண்டு வருகின்றான். மகனின் தீய எண்ணங்களைச் செயற்பாடுகளை அறிந்த தாய் தடுத்து நிறுத்துகின்றாள். தாயை ஏசுகின்றான் மன்னன். தாயும் ஏசுகிறாள், "பெண்ணாசை கொண்ட காமப் பிசாசே! உனக்கு காமப்பசி தீர்க்க ஒரு பெண் தானே இதோ! உன் காமப்பசியை என்னிடம் தீர்த்துக் கொள்" என்று கூறி இருகைகளையும் அகல நீட்டியவாறு மணிமாறனைத் திட்டுகிறாள். தாயின் கைகளை ஏளனமாகத் தட்டிவிடுகின்றான். கண் மூடித் திறப்பதற்குள் மணிமாறனின் கன்னங்கள் தாயின் இரு கைகளாலும் தாக்கப்படுகிறது. மின்னல் வேகம் எதிர்பாராத நிகழ்ச்சி. எனது தலை சுழல்கிறது. தாயாக நடித்தவர் தேவரையாளி கிராமத்தை சேர்ந்த நடிகர் திரு.ஐயாத்துரை என்பவர் ஆவார். அவர் உணர்ச்சி வசப்பட்டு என் கன்னத்தில் படார் படார் என்று அடித்து விட்டார். மணிமாறனாக நடித்த நான் "அம்மா" "அம்மா" என்று கதறியவாறு நிலத்தில் சாய்ந்து விட்டேன். மக்கள் மத்தியில் இருந்து சில குரல்கள் "உவருக்கு உந்த அடி போதாது " பொல்லாலே கொடுக்க வேண்டும் " என்று ஏசும் ஒலி எனது காதுகளில் கேட்டது. இந்த உச்சக்கட்ட நடிப்பு மக்களின் பாராட்டைப் பெற்றது.

✪ கலாபூஷணம் அவர்களே! நாட்டுக் கூத்தினைப் பற்றிய தங்களின் கருத்தினையும் அதன் ஒற்றுமை வேற்றுமைகள் பற்றியும் கூறுவீர்களா?

இசை நாடகத்தைப் பற்றி கூறப்புகுந்த நான் நாட்டுக் கூத்தினைப் பற்றியும் கூறத்தான் வேண்டும். பெயர் நாட்டுக்கூத்து என்று இருந்தாலும் இடத்துக்கிடம் கூத்தின் தன்மைகள் வேறுபாடுவதைக் காண்கின்றோம். "கூத்து" என்ற சொல் "குதி" என்ற வினையடியிலிருந்து பிறந்தது. குதித்து ஆடுவதுதான் கூத்து என்ற முடிவு பெற்றது. பொதுவாக ஈழத் திருநாட்டின் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் ஓய்வு நேரத்தினை மகிழ்வுடன் களிப்பதற்கு நாட்டுக் கூத்தினை நடாத்தினர். இந்து மதத்தினரும் நாட்டுக்கூத்தினை ஆடி மக்களை மகிழ்வித்தனர். ஆனால் கிறிஸ்தவர்கள் ஒரு எறியில் இரண்டு மாங்கனிகளைப் பெற்றனர். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மக்களை மதம் மாற்றுவதற்கு நாட்டுக் கூத்தினை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தினர். இவர்களின் முயற்சியினால் மூவிராசாக்கள் நாடகம், ஞானசௌந்தரி நாடகம் போன்றவை மேடையேறின. இலங்கையில் வங்காலை, பேசாலை, மன்னார்,மட்டக்களப்பு,திருகோணமலை, குருநகர், பாசையூர்,மாதகல், நாவாந்துறை, சில்லாலை, வட்டுக்கோட்டை போன்ற

கரையோரப் பகுதிகளிலும் நாட்டுக் கூத்து ஆடப்பட்டு வந்தன.

நாட்டுக்கூத்துக்களில் வடமோடி, தென்மோடி என்ற இருபிரிவுகள் காணப்படுகின்றன. வடமோடியில் இராமாயணம், பாரதம் போன்ற வீரக்கதைகள் இடம் பெறுகின்றன. தென்மோடியில் தமிழ்க்காவியங்கள் சார்ந்த காதற்கதைகள் இடம்பெறுகின்றன. வட மோடியில் இலகுவான ஆட்டம் இடம் பெறும். தென்மோடியில் கலைநுட்பம் வாய்ந்த ஆட்டம் கைக் கொள்ளப்படும். தென்மோடியில் இயங்கும் நடிகர் பாடிக் களைப்புற்றதும் பக்கப்பாட்டுக்காரர் பாடி உதவுவர். இத்தன்மை வடமோடிக்கில்லை.

வடமோடியில் சாதாரணமாகப் பாடி வசனங்களைப் பேசும் வேளையிலும், பாடும் போதும், இழுத்துப் பாடுவதையும் பேசுவதையும் காணலாம். வடமோடியில் நடிகர் அணியும் உடை, வாள், முடி என்பன பாரங்கொண்டவையாக இருக்கும். தென்மோடியில் அவை பாரமற்றவையாகவே அமைந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை என்ற கிராமத்திலே ஆட்டத்தோடு கூடிய தென்மோடிக் கூத்துகளைக் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

✪ கலாபூஷணம் அவர்களே! இன்றைய இளைய தலை முறையினருக்கு நீங்கள் கூறவிரும்புவது?

இன்றைய இளைய தலை முறையினருக்கு நான் கூறவிரும்புவது நாடகங்கள் அதாவது இசை நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள் போன்றவை நாடகமரபு பிறளாமல் இருக்கக் கூடியதாக ஆக்க வேண்டும். சினிமா முறையில் நாடகங்கள் எழுதுவதையோ நடிப்பதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும். சில அண்ணாவிமார், நெறியாள்கை செய்பவர்கள், நாடக எழுதுனர்கள், மக்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பெண்ணினத்தை கொச்சைப்படுத்தி எழுதுவதையோ, நெறியாள்கை செய்வதையோ தவிர்த்தல் வேண்டும். அதுமட்டுமல்ல சினிமாப் பாடல்களைப் பின்னணியாகக் கொடுக்காமல் ஒவ்வொரு நடிகனும் சொந்தக் குரலில் பாடி நடித்து நாடகக் கலையை வளர்க்க முன்வர வேண்டும். சினிமாப்பாடல்களை ஒலிநாடாவில் ஒலிக்கவிட்டு அந்த இசைக் கேற்ப நடிப்பது நாடகமாகாது.

கூத்து நாடகங்களில் பாரம்பரியம் மாற்றம் செய்யப்படலாகாது. இன்றைய சில அண்ணாவிமார், நெறியாள்கை செய்வோர் சிந்துநடைக் கூத்தில் சினிமாமெட்டுக்களை, பாடல்களைப் புகுத்தி நாடகத்தின் கூத்தின் தன்மையையும் தரத்தையும் கெடுத்து வருகிறார்கள். இவை புதிய உத்திகள் அல்ல மேலே கூறியவைவற்றை இளைய தலைமுறையினர் உணர்ந்து நடக்க வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றேன்.

**வாழ்க செந்தமிழ் !! வளர்க இசை நாடகக் கலை!!!**

# நெடுஞ்சாலையும் நாமும்

-கலா கேசவன்-

அந்த நெடுஞ்சாலை
மிக அமைதியாக நீண்டு கிடக்கிறது.


செந்நிறக் குருதி சிந்திய
எம் தேசத்தின்,
உயிர்ச் சுவடுகளை எல்லாம்
தன்னுள்ளே மறைத்துக் கிடக்கிறது.

வெளியே துருத்திச் கெண்டு நிற்கும்
எச்சங்களைக் காட்டி
கண்ணீர் வடிக்கின்றது.
தன்னுள்ளே புதையுண்டு போன
உயிர்ச் சுவடுகளை மட்டும்
காட்ட மறுக்கிறது.

தலையிழந்த பனை மரங்களையும்
வேரிழந்த பெரு மரங்களையும்
சிதிலமடைந்த கட்டிடங்களையும்
பொலிவிழந்த பெயர்ப்பலகைகளையும்.......... காட்டி

எம் உயிர்ச் சுவடுகளை மட்டும்
மறைத்து நிற்கின்றது.
ஓ....எம் நீண்ட நெடுஞ்சாலையே
காயம்பட்ட தழும்புகளை மறைத்து
உன்னை செப்பனிட்டு வருகிறார்கள்.
நீ காட்ட மறுத்து நிற்கும்
உயிர்ச் சுவடுகளைப் போல்,
நாமும் எம்முள் புதையுண்டு போயிருக்கும்
துயரச் சுமைகளை மறைத்து
எம் வாழ்வை செப்பனிட முனைகின்றோம்.

# காலமாற்றம்



சிறுகதை

அஜந்தன்

வாட்டார்ப்பம்மை வாசற்படியால் கீழே இறக்கி கேற்றைச் சாத்தி விட்டு தோட்டத்தை நோக்கிய என் பயணத்தை ஆரம்பித்தேன். நான் பம்பை இழுக்க இழுக்க அதன் வண்டிற்சில்லோ கிரீச் கிரீச் எனச் சத்தம் போட்டுத் தனக்குத் தாகம் என்று பறைசாற்றும் முயற்சியில் களமிறங்கி இருந்தது. அப்போதுதான் இரண்டு கிழமையாய் வண்டிற்சில்லுக்கு ஓயில் போடாதது என் ஞாபகத்தில் கனன்றது. நானே இன்னும் விடியற்காலமை தேத்தண்ணி கூடக் குடிக்கவில்ல உனக்கு ஓயிலோ? என்ற ஓரவஞ்சனையோ என்னவோ அதையொன்றும் சட்டை செய்யாது பம்மைக் கஸடப்பட்டு என்னோடு ஒத்துழைக்க வைத்து தோட்டக் கிணற்றடியை ஒருமாதிரி அடைஞ்சு அப்பாடா என்று ஒரு பெருமூச்சை உதிர்த்து விட்டு நிமிர்ந்தேன். அந்தப் பரந்த தோட்ட வெளியில சில வாட்டர்ப்பம்கள் தங்களின் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டு நின்றன. தோட்டத்தில் வெங் காயங்களும் வேறு பயிர்களும் தங்கள் பசுமையின் செழிப்பைக் காட்டுவதில் ஆர்வமாக இருந்தன. வெறுந்தரைகளில் புற்கள் தங்களது ஆதிக்கத்தைக் காட்டுவதில் முனைப்பாக இருந்தன. வெறுந்தரையில் புற்கள் முளைத்திருப்பதைப் பார்க்கும் போது எனக்கு, பயிர் என்னும் காதலியை மணக்க முடியவில்லையே என்று நிலமென்னும் காதலன் தாடி வளர்த்திருந்தது போல இருந்தது. இவ்வாறு வித்தியாசமாக யோசித்துக் கொண்டு ஆறெழு மாசமாய் என்கன்னங்களில் படர்ந்திருக்கும் தாடியையும் மெதுவாகத் தடவிப் பார்த்துக் கொண்டேன்.

''டேய் கண்ணன் என்னடா யோசிக்கிறாய் கெதியாய் பம்மைப் பூட்டனடா'' அப்பாவின் குரல் என்னைத் திசைதிருப்பியது. அப்பா கொஞ்சம் பொறுங்கோவன் இண்டைக்கும் வெங்காயம் வைக்கிற ஆக்கள் வருகினமோ தெரியாது? ஏன் இப்ப அவசரப் படுறியள்? இரண்டு நாளாப் பம்மைக் கொண்டு வந்து

திருப்பிக் கொண்டு போறது தெரியாதோ? என்று கூறிவிட்டு மூன்று நாட்களாய் கட்டப்பட்டு நாய்களின் விளையாட்டு மைதானமாய் மாறிவரும் வெங்காயப் பாத்திகளைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அப்பாவுக்கு விளங்கி விட்டது. மௌனித்துக் கொண்டார்.

இண்டைக்கும் இந்த மூதேசியள் வருகுதுகளோ தெரியாது இண்டைக்கும் வராட்டியல்லோ என்ர குணம் தெரியும் என்று கூறிக்கொண்டே போனவரின் வாயில் "செந்தமிழ்" வார்த்தைகளெல்லாம் வந்து புரண்டன. அப்பாவின் கண்கள் அனலினைக் கக்கின. கோபத்தின் உச்சியில் கண்ணில் இருந்து புனலும் எட்டிப் பார்த்திருந்தது.

பாத்தி கட்ட வர்றம் என்று நாலைந்து நாளாச் சொல்லி ஏமாத்தி என்ர ஆம்பிளைப் பிள்ளையும் நானுமெல்லே கஷ்டப்பட்டுப் பாத்தியை கட்டினது. (வெயிலுக்கை நின்று இன்னும் கறுத்துப் போவன் என்ற எதிர்பார்ப்பு அப்பாவின் வார்த்தைகளில் கலந்திருந்தது.) இப்ப அந்த பாத்திகளும் நாயளின்ர விளையாட்டு மைதானமாப்போச்சு, நாசமாப் போக, இண்டைக்கும் வெங்காயம் வைக்கிறவகள் வராட்டி நானும் மனிசியும் பிள்ளைகளும் தான் வெங்காயம் வைக்க வேணும் போலவெல்லோ கிடக்குது" அப்பா மீண்டும் மீண்டும் தனது பல்லவியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்.

மதவடி றோட்டைப் பார்த்துப் பேசிக் கொண்டு நின்றவர் "டேய் யாரோ வருகுதுகள் போல கிடக்குது யார் என்று பார்" என்று திடீரெனக் கூறிய போது அவரது முகத்தில் சந்தோசம் எட்டிப் பார்த்திருந்தது. ஓமப்பா நாலைஞ்சு பெண்டுகள்தான் வருகுதுகள் அதுகள் போலத்தான் கிடக்குது" என்று நானும் அப்பாவின் வார்த்தைக்கு "ஓப்" போட்டேன். ஆக்கள் நெருங்க நெருங்கத் தான் என்ர முகமும் அப்பாவின்ர முகமும் கறுத்துப் போச்சு. அட உதுகள் சின்னத்தம்பியின்ர அந்தியேஷ்டி வீட்ட உடுத்துப் படுத்துக் கொண்டு போற பெண்டுகள் எல்லோ! இருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்றால் காத்திருக்கிற எங்கன்ர கண்ணுக்கும் வாறது எல்லாம் அவகளாப் போச்சு காலம் கலிகாலமாய் போச்சு" அப்பா புலம்பல் பல்லவியைத் தொடர ஆரம்பித்தார்.

நான் கையில் கட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்த்தேன் நேரம்

எட்டை எட்டிப் பிடித்து ஒருமணி நேரம் ஆகி இருந்தது. திடீரென்று நிமிர்ந்து சற்று வடிவாக உற்றுப் பார்த்தேன். சந்திர மண்டலத்தில் கால் பதித்தது போன்ற ஒரு பூரிப்பு என்னோடு ஒட்டிக் கொண்டது. ''அப்பா ஆக்கள் வருகினம்'' என்றேன். அப்பாவும் சற்று உற்றுப் பார்த்துவிட்டு சந்தோசத்தை உள்வாங்கி கொண்டார். டேய் கெதியாய்ப் பம்மைப் பூட்டு" என்று உத்தரவும் போட்டார். நானும் பம்மைப் பூட்டும் முயற்சியில் களமிறங்க ஆரம்பித்தேன். நான் பம்மை பூட்டி முடிக்கவும் ஆக்கள் வந்து சேரவும் சரியாக இருந்தது.

அவர்கள் வந்து சேர்ந்தபின் பூரிப்பைப் பூசியிருந்த அப்பாவின் முகம் இருண்மையையும் பூசிக் கொண்டது. என்னடியப்பா 4 பரப்பு வெங்காயம் வைக்க 4 பேர் வந்திருக்கிறியள் ஆக்கள் காணுமே இண்டைக்கு வைச்சு முடிக்கிற பிளான் இல்லையோ 12 பேற்ற கூலியும் நீங்கள் பங்கிடுகிறதுக்கான பெரிய திட்டத்தோட தான் வந்திருகிறியள் போல கிடக்குது என்று அப்பா தொடர முன்னமே ''உங்களுக்கென்ன தெரியும் நாங்கள் நாலுபேர் வந்ததே பெரியகாரியம் உங்களுக்கு இன்னும் ஆக்கள் வேணுமோ? அடுத்த மார்கழி வைப்புக்கு ஒருவரும் வர்ற பிளான் இல்லை. எங்கன்ர பிள்ளைகளும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ராசா மாதிரி உழைக்குதுகள். எங்களைக் கூலிவேலைக்கு போகக் கூடாதென்று உத்தரவும் போட்டிருக்குதுகள். இந்த ஆடிக்காயை வைச்சுப் போட்டு நாங்கள் வேலையளை நிற்பாட்டப் போறம். எங்கன்ர கால்ல விழுந்தாக் கூட வர்றதுக்கு ஆக்கள் இல்லை. அப்படியிருந்தும் வர்றதா இருந்த வெங்காயம் வைக்கத் தெரியாத ஆகலும் கஷ்டப்பட்டதுகள் தான் வருங்கள். அதுகளோட நீங்கள் திண்டாட வேண்டியதுதான். அப்படியில்லையென்றால் இனித் தோட்டம் துரவெல்லாத்தின்ர அலுவலும் நீங்கள் தான் பார்க்கவேணும்" என்று வந்தவளில் ஒருத்தி கதாபிரசங்கம் ஒன்றை நடாத்தி முடித்திருந்தாள். நான் அப்பாவை பார்த்தேன். அப்பா பேயறைந்தது போல் பேசாமல் நின்றார். பின்னர் தன்னைச் சமாளித்துக் கொண்டு சரி சரி முதல்ல வேலையைப் பாருங்கோ! என்னண்டாலும் செய்து தொலையுங்கோ என்று விட்டு அப்பால் நகர்ந்தார். நான் பம்மை ஸ்டார்ட் செய்து பாத்திகள் ஒவ்வொன்றுக்கும் தண்ணீரை கட்ட

ஆரம்பித்தேன்.

இன்றைக்கு ஒருமாதிரி வெங்காய வைப்புத் திருவிழா முடிஞ்சு போனதனால் மனதெங்கும் நிம்மதியின் வாசம் பரவியிருந்தது. இந்த முறை ஒருமாதிரி ஒப்பேறியிட்டுது அடுத்த முறை எல்லா வேலையும் நாங்கள்தான் செய்ய வேணும் போல கிடக்குது. இல்லாட்டி என்ன செய்கிறது தோட்டத்தை விட்டிட்டு அல்லது விற்றிட்டு மூத்தண்ணா அனுப்பிற காசில சாப்பிட்டு சீவியத்தை நடத்த வேண்டியதுதான் என்று எண்ணியவாறு ரேடியோவைப் போட்டு இரண்டு பாட்டாவது கேட்பம் என்றுவிட்டு ரேடியோவை ஒன் பண்ணி யாழ்சேவை அலை வரிசையை பிடித்தேன். அங்கே ஈராக்கு யுத்தம் முடிஅ்சு போச்சு அங்கே! எனக்குள்ளே யுத்தம் தொடங்கிட்டுது இஙகே! என்று பாட்டொன்று ஒலிபரப்பாகவே வேண்டாம் இந்த வினையென்று புலிகளின் குரலுக்கு மாத்த அங்கே! 'யாதும் ஊரே யாவரும் கேளீர் என்றான் சங்கத் தமிழன்' என்ற அருமையான பாடல் காதிலே தேனைப் பாய்ச்சிக் கொண்டிருக்க கதவைக் காலால் எட்டி மிதிச்சு தள்ளாடியபடி ஏதேதோ புலம்பியபடி அப்பா வீட்டுக்குள் நுழைந்தார் எனக்கு விளங்கி விட்டது அப்பா கந்தசாமி இன்றைக்குத் தண்ணிச்சாமியாய்த்தான் வந்திருக்கிறார் என்று.

உந்த முதேவியள் எனக்கு வேலை காட்டுகிறாகள் இந்த கந்தசாமியை சாமியென்று கை கட்டி சேவகம் செய்தவகள் எனக்கு இன்றைக்கு என்க்கு தண்ணி காட்டப் பாக்கினம் வெளிநாட்டுக் காசு வந்தா அவை பெரிய கொம்பே வேலைக்கு வாவெண்டா வரவேண்டியதுதானே? நாங்கள் குடுத்த கூலிக் காசிலே வளர்ந்தவகள் என்னோடயே இண்டைக்கு வம்பை வளக்க பாக்கினம் அப்பா இவ்வாறு வீடுஅதிர புலம்பித்தள்ள அது அடுத்த வீட்டுக்கு கேட்கபோகுது என்ற பயத்தில் ரேடியோவின் சவுண்டைக் கூட்டினேன் அப்பர் கண்களால் என்னைப் வெறித்துப் பார்த்திட்டு

டேய் நீ இப்ப ரேடியோவை நிப்பாட்டிறியோ இல்லையோ இல்லாட்டி ரேடியோவை உடைச்சுப் போடுவன் என்ர கதை உனக்கு விழல்க் கதையாய்க் கிடாக்கேயடா என்று அப்பா சத்தம் போட ஆரம்பித்தார் எனக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது அப்பா நீ பேய்க்கதை கதையாத அதுகள்

காசு இருந்தால் ஏன் உன்னட்டை வரப்போகுதுகள் காசில்லை யெண்டாத் தானே கூலி வேலை செய்யோணும் இல்லாட்டி ஏன் கூலி வேலை செய்யோணும்? அதுகளின் பிள்ளை குட்டிபள் நினைக்கிறதும் சரிதானே இனிமேலாவது அதுகள் கஷ்டப் படாமல் இருக்கோணு மெண்ட நினைப்புச் சரிதானே? இதுக்கேனப்பா நீங்கள் கத்துறியள்? நீங்கள் கதைக்கிறது உண்மை யிலேயே விழல்க் கதைதான் என்று நான் வார்த்தைகளை அவசரமாய் கொட்டித்தள்ள டேய் நீ அந்தக் கேவலங்கெட்டவகளின்ர பெடியள் இரண்டு மூன்று பேர் உனக்கு கூட்டாளியெண்டோன்ண என்னோட கதைகதைக்காதே அப்படியெண்டா யார்தாண்டா முதலாளியாக இருக்கிறது? யார்தாண்டா தொழி லாழியாய் இருக்கிறது? மெத்தை யில் படுத்தாலும் நாய் நாய் தாண்டா?

அப்பா இப்படிச் சொன்னதும் எனக்குக் கோபம் இன்னும் அதிகமானது அப்பா இதுவரை காலமும் குப்பி விளக்கிலயும் லாம்பு விளக்கிலயும இருந்து வாழ்ந்த நீங்கள் கரண்டைக் கண்ட உடனே அதையெல்லாம் விட்டுத் தள்ளலாம் ஆனா உங்களைக் கண்டவுடனே கை கட்டி நின்றவங்க நிமிர்ந்து வாழக் கூடாது என்று நினைக்கிறீங்களோ?

காலத்தின் சுழற்சியில் அவைதான் இனிமேல் முதலாளியாவும் நாங்கள் தொழிலாளியாயும் மாறுகிறாமோ யாருக்குத் தெரியும்? ஏன் எங்கண்ட மூத்தண்ணா லண்டனில் டொக்டராகவே இருக்கிறார் அவர் அங்கே என்னத்தைத் தான்........? இப்படி நான் அடுக்கிக் கொண்டு போக, திடீரென்று அப்பாவின் அஞ்சு விரலும் என் கன்னங்களில் பதிந்தது எதிர்பாராத அந்த நிகழ்வால் அதிர்ச்சியால் கண்களில் இருந்து கண்ணீர் எட்டிப்பார்த்தது.

"நாய் வால நிமிர்த்த தேலதடா அதே போலத்தான்டா உன்னையும் திருத்தேலாதடா எக்கேடு கெட்டெண்டாலும் போ" எனச் திட்டிவிட்டு கதவை ஓங்கிச் சாத்திவிட்டு அப்பா அப்பாலே போய்விட்டார்.

நாய்வால நிமித்தேலாட்டிலும் அப்பா போன்றவர்களின் ஆணவ வாலை சாதி பற்றிய திமிர் வாலை "இனிவரும்காலங்கள்" நிமிர்த்தும் என்று யோசித்துக் கொண்டு நானும் கதவைச் சாத்திவிட்டு றோட்டினில் இறங்கினேன்.

பக்கத்து வீட்டு பரமசிவம் இரண்டு தடிகளை இணைத்து பெரிய கொக்கத் தடியாக்கி தென்னையில் தேங்காய் பறிக்க முயல்வது என் கண்களில் தெளிவாகத் தெரிந்தது.

**முற்றும்**

# யாழ்ப்பாணக் கல்வித் தரம் வீழ்ச்சிக்கு காரணமாகும் காரியங்கள்



இன்றைய உலகு விஞ்ஞான உலகு. விந்தைகள் செய்து சிந்தைகள் கவரும் விசித்திர உலகு. இங்கே கால கதியின் வேகத்தில் பழையன கழிகின்றன. புதியன புகுகின்றன. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் நாளுக்கு நாள் மாற்றம் பெற்று செல்கின்றது. அவ் வாழ்க்கைத் தர மாற்றத்தோடு சேர்ந்து நடை பயில வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

தேன் மொழியாம் தென் மொழியாம் அதன் பெயர் தமிழ்மொழியாம் என கவிஞர்களால் போற்றப்பட்ட அமுதமொழியாம் தமிழ் மொழிக்கு ஆரியச் சக்கரவர்த்தி காலம் தொடக்கம் அவைக்களமாய் விளங்குவதும்; இலங்கையின் மூளைப்பகுதி என போற்றப்படுவதுமான யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இன்று கல்வித்தரம் வெகு வேகமாக வீழ்ச்சிகண்டு வருகிறது.என்று பரவலாக பாடசாலை தொடக்கம் பத்திரிகை வரை பேசப்படுகிறது. பெரும்பாலான எல்லோரும் மாணவர்கள் மீதே பழியைச் சுமத்துகின்றார்கள். " மாணவர்கள் தான் யாழ்ப்பாணக் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு முழுக்க முழுக்க காரணம் " என அடித்துக் கூறுகின்றார்கள்.இதனை அடியோடு ஏற்றுக் கொள்ள முடியாது. சில சந்தர்ப்பங்களில் புறநடையாக மாணவர்கள் ஒரு சிலரது பிறழ்வான நடத்தைகள் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த மாணவர் சமுதாயத்தையும் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் என்று குறிப்பிட முடியாது. இங்கு மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சிக்கு முக்கிய காரணிகளாக போரின் தாக்கங்களையும், வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தவறான பாதையில் பிரயோகிப்தையும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு படிக்கற்களாக இருக்க வேண்டிய சமூகத்தினர் தடைக் கற்களாக இருப்பதுமே காரணமாக அமைகிறது.

அன்றைய காலங்களிலே யாழ்ப்பாணக் கல்வித்தரம் வளர்ச்சி பெற்று: எழிச்சி பெற்று கொடி கட்டிப் பறந்தது. யாழ் மாவட்டத்தில் முதலாவது நிலையைப் பெற்ற மாணவர்கள் புள்ளிகளின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்தபோது அதே மாணவர்களே தேசிய ரீதியிலும் முதலாவது இரண்டாவது நிலைகளை தட்டிச்சென்றார்கள். இன்று இந் நிலை தலை கீழாக மாறி வருகிறது. உதாரணமாக 2003 கலைத்துறையில் யாழ் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்ற

மாணவி தேசிய மட்டத்தில் கலைத்துறையில் 51வது இடத்தையே பெற்றுக் கொண்டார். இவ் வீழ்ச்சியானது ஒட்டு மொத்த யாழ்ப்பாண கல்வித்தர வீழ்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. இக் கல்வித்தர வீழ்ச்சிக்கு படிப்படியாக எவ்வாறு வித்திடப்பட்டு இன்றைய நிலை அடைந்தோம் என்பது பற்றி ஆராய்வோம்.

ஐம்பத்தாறுகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகள் தொடக்கம் செம்மணிப் படுகொலைகள் ஈறாக பல படுகொலைகளின் வடுக்களைத் தாங்கியவர்களாய்; இடம் பெயர்வின் மத்தியிலே சிக்குண்டு தமது முத்தான சொத்துக்களை இழந்தவர்களாய்; பாசத்துக்குரிய உறவுகளை இழந்தவர்களாய்; தமது சொந்த இடத்தில் மீண்டும் குடியேற முடியாதவர்களாய்; பாடசாலை வளாகத்தைச் சுற்றி முட்கம்பி வேலிகளால் சிறை வைக்கப்பட்டவர்களாய்.

*ஆபாசத் திரைப்படங்களை மாணவர் மத்தியில் மலிவான விலையில் கிடைக்கச் செய்தல்.....................*

இன்னும் எத்தனையோ எத்தனையோ ஒடுக்கு முறைக்கு உட்பட்டவர்களாய் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மாணவர்கள் அடக்கப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழ்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மாணவர்கள் இவற்றை எல்லாம் தாங்கி வடுக்களாக வாங்கி சிலவற்றை இன்றும் சுமந்து நடக்கின்றார்கள். இது இப்படி இருக்க ! கடந்த ஐந்தாறு வருடங்களாக மாணவர் மத்தியில் சில நஞ்சூட்டல் நிகழ்வுகளும் இடம் பெற்று வருகின்றன. ஆபாசத் திரைப்படங்களை மாணவர் மத்தியில் மலிவான விலையில் கிடைக்கச் செய்தல்; அவர்களது கல்வியை சீரழிக்கும் வகையில் போதைப்பொருள்கள், மது, சிகரெட் போன்றவற்றை மாணவர்களது கைகளிலேயே தானாக வந்து விழச்செய்தல் போன்ற கல்வியைக் குழப்பும் செயல்கள் மூலம் யாழ்ப்பாணக் கல்விச் சூழ்நிலை திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. ஏன் இவ்வாறு இங்கு குறிப்பிடப்படுகிறது. என்றால் இன்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழருக்கான தனித்துவமான கலை கலாசார பண்பாடுகள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அத்தகைய தனித்துவங்கள் மறைந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது.

வாழ்க்கைத் தரத்திலேற்பட்ட முன்னேற்றம் எவ்வாறு தவறான பாதையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை இனி ஆராய்வோம்.இன்று நவீன சாதனங்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. தொலைபேசி, வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி, கணனி என்பன. அவற்றிலே முக்கியமானவை. இன்றைய சூழ்நிலையில் எல்லோர் வீடுகளிலும் கணனி இல்லாவிட்டாலும் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி என்பன மலிவாக காணப்படுகின்றன. இச் சாதனங்களில் பெரும்பாலானவை வெளிநாட்டுப் பணங்களினால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே கொள்வனவு செய்யப்பட்டவையாக காணப்படுகின்றன.

இச் சாதனங்களும் ஒரு வகையில் மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்கு காரணமாக அமைகிறது. உதாரணமாக தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்துக் கொண்டால் தினமும் அதற்கு ஓய்வே கிடைப்பதில்லை. மேலும் அதற்கு உரமூட்டுவதற்காக sun T.V வந்துள்ளது. பல இடங்களில் ஒரு டிஸ்அன்டெனா மூலம் இருபது முப்பது இணைப்புக்களைப் பெற்று பல குடும்பங்கள் sun T.V பார்க்கின்றார்கள். இதனால் இவர்கள் வீடுகளில் இருபத்துநான்கு மணி நேரத்தில் பன்னிரண்டு மணி நேரமாவது தொலைக்காட்சி ஓடிக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு நாளும் குறையாமல் இரண்டு படம்; பல்வேறு நாடகங்கள்,அவை மெட்டிஒலி, வேலன் என விரிந்து கொண்டே செல்கின்றது. குடும்பத் தலைவன் தொடக்கம் ஒரு வயதுக் குழந்தை வரை எல்லோரும் தொலைக்காட்சிக்கு முன்னால்! எனவே மாணவர்கள் வீட்டில் படிப்பதெங்கே! படித்ததை மீட்கத்தான் பொழுது எங்கே! எலி பிடிக்க வேண்டிய பூனைக்கு முன்னால் மீனை வைத்து விட்டு மீனை சாப்பிடாதே! என்றால் அது பார்த்துக் கொண்டிருக்குமா? திருடத்தானே செய்யும்! அதே நிலை தான் மாணவர் நிலையும். தீ அளவாக எரிந்தால் விளக்கு அளவு கடந்தால் நெருப்பு இத்தகையதே தொலைக்காட்சியும். தொலைக்காட்சியை அளவோடு பயன்படுத்தினால் நன்றே! மாறாக அளவுக்கு மிஞ்சி பயன்படுத்தினால் அதுவே மாணவர்களின் கல்வியை சிதைக்க காரணமாய் அமைந்துவிடும். மேலும் தொலைக்காட்சிப் படங்களை அளவுக்கு மிஞ்சிப் பார்ப்பது அறிவினை மழுங்கடிக்கச் செய்யும் என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை உணர்ந்து மாணவர்களுக்கு வீட்டிலே படிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சார்ந்துள்ளது.

இன்று பட்டி தொட்டி எங்கும் சினிமாத் தியேட்டர்கள் பெருகிக் காணப்படுகின்றன. இங்கே விதம் விதமான படங்கள் காண்பிக்கப் படுகின்றன. மாணவர்கள் இதனால் பாடசாலைக்கு செல்லாது படக்காட்சிச் சாலைக்கு செல்லும் நிகழ்வும் சில வேளைகளில் நடைபெறுகிறது. இதனால் மாணவர்களுக்கு படிக்க வேண்டும் என்ற ஓர் எண்ணமே அவர்களது மனதில் இருந்து மறைந்து போகின்றது. மேலும் இன்ரநெற் போன்றவற்றின் தாக்கம் வெளிநாடுகளில் சூடு பிடிக்கத் தொடங்கினாலும் அவை இன்னும் பெரிதாக இங்கு புழக்கத்துக்கு வரவில்லை. அந்த வகையிலே இன்ர நெற்றுக்கு நன்றி சொல்ல வேண்டும். யாழ் நகரில் சில உழஅிரவநச உநவெநச களில் இன்ரநெற்றைக் தவரான முறையில் மாணவர்கள் பயன்படுத்துவதும் நடந்து வருகின்றது.

மாணவர்கன் சமூகத்து படிக்கற்களாக இருக்க வேண்டிய சமூகம் இவ்வாறு தடைக் கற்களாக இருப்பது பற்றி மேலும் ஆராய்வோம். புகைப்பிடிக்கின்ற பெரியவர்கள் சிலர் சிறுவர்களான மாணவர்களைக் கொண்டு சிகரெட், பீடி என கடைகளிலே வாங்கி தாங்கள் நுகர்கிறார்கள். இதனை வளர்ந்து வரும் இளம் சமுதாயம் பார்க்கின்றது. தந்தை மது அருந்துகின்றார்.மகன் அதை வியப்பாக பார்க்கிறான். மது அருந்தி விட்டு அவர் புரியும் ரகளைகளால் அவன் துன்பப்படுகிறான்! அவனது குடும்பம் துன்பப்படுகின்றது!! நாளாக நாளாக விரக்தி அதிகரிக்கிறது. தானும் அவ்வாறு செய்தால் என்ன? என்ற ஒரு எண்ணம்

அவனை அறியாமலேயே அவனது மனதில் வேரூன்றத் தொடங்குகிறது. பிஞ்சு மனம் ஒன்றிலே நஞ்சு விருட்சம் ஒன்று வேர்விட ஆரம்பிக்கிறது. பிற்காலங்களிலே அவன் அதையே பழக்கமாக நாளாந்த வழக்கமாக செய்யத் தொடங்குகின்றான். இத்தகையோரை நண்பர்களாக கொண்ட மாணவர்கள் பாதிக்கப் படுகின்றார்கள். மெல்ல மெல்ல மாணவர்கள் அழிவுப் பாதையில் தள்ளப்படுகிறார்கள்.

இன்று ஏதாவது ஒரு கோயிலில் அலங்கார உற்சவம் தொடங்கி விட்ட தென்றால் அங்கே பதினைந்து நாளும் ஏதாவது நிகழ்வுகள் இடம் பெறும். அந் நிகழ்வுகள் மாணவர் சமூகத்திற்கு பிரயோசனமான அறிவை வளர்கின்ற சொற்பொழிவுகளாக, பட்டிமன்றங்களாக, கவி அரங்குகளாக, நடத்தினால் பலரும் நன்மை பெறுவார்கள். ஆனால் நடப்பதென்ன ஒவ்வொரு நாளும் விடிய விடிய காசை கரியாக்கி ''கோஸ்டி'' பிடிக்கப்படுகிறது. இருபது முப்பது Box களை அடுக்கி வைத்து விட்டு அவர்கள் விடிய விடிய பாடுவார்கள் படிக்கின்ற மாணவர்கள்பாடு அன்று அதோ கதிதான். இந் நிகழ்வினால் மாணவர்கள் இரண்டு வகையில் பாதிக்கப்படுகின்றனர். ஒன்று இதைப் பார்க்கின்ற மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றது. மற்றையது அச் சுற்றாடலில் உள்ள மாணவர்களால் படிக்க முடியாது இருப்பது. ( சத்தத்தின் காரணமாக ) ஆனால் அவர்கள் இதைப் பற்றி கவலைப் படுவதாக தெரியவில்லை மாறாக அலங்கார உற்சவங்களில் போட்டி போட்டு ''கோஸ்டி'' பிடிக்கின்றனர்.

இன்றைய பொது நூலகங்களை பொதுவாக எடுத்துக் கொண்டால் அங்கே றாக்கைகள் பூராகவும் ரமணிச்சந்திரன் தொடக்கம் ராஜேஸ்குமாரின் புத்தகம் ஈறாக எல்லாப் புத்தகங்களும் நூற்றுக்கணக்காக அடுக்கப்பட்டு இருக்கும். இவற்றை யாரும் இரவல் வாங்கலாம். எந்நேரமும் படிக்கலாம். ஆனால் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களோ, பயிற்சிப்புத்தகங்களோ! அங்கொன்று இங்கொன்றாக ஓரிரண்டு காணப்படும். அவற்றைக் கூட இரவல் பெறமுடியாத நிலை காணப்படும். இப்படியாகவே நூலகங்கள் பல இன்று பரந்து காணப்படுகிறது.

இங்கே கைவிரல்களே கண்ணைக் குத்த முனையும் நிலை தொடர்கிறது. மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக ஊக்க சக்தியாக ஒரு படிக்கல்லாக இருக்கவேண்டிய சமூகமே தடைக்கல்லாக இருந்தால் யாழ்ப்பாணக் கல்வித்தரம் வீழ்ச்சி அடையத்தானே செய்யும். மொத்தத்தில் எல்லோருமே ஒரே வழியை காட்டினால் அவர்கள் அங்கே தானே செல்வார்கள். பின்னர் மாணவர் என்ற அம்பை நோவதில் என்ன பயன் சமூகம் எய்பவர்களாக இருந்து கொண்டு.

**சி.திருச்செந்தூரன்.**

# அண்மைக்கால அறிவியல் தகவல்கள்

## அழிந்துபோகும் டைட்டானிக்கின் பாகங்கள்

கனவுக் கப்பல் என அழைக்கப்பட்டு உலகில் மிகப் பெரிய கப்பலாக உருவாக்கப்பட்ட டைட்டானிக் கப்பல் அதன் முதல் பயணத்திலேயே முதல் கோணல் முற்றும் கோணல் என்பதுவாய் 1500 பயணிகளுடன் கடலில் மூழ்கி ஆண்டுகள் 90 முடிவடைந்து விட்டன. இச் சம்பவத்தை மையமாக வைத்து Titanic என்ற பெயரில் திரைப்படம் ஒன்று 19998 ல் வெளியாகி உலகில் உள்ளோரின் புருவங்களை வில்லாக மாற்றியமை அறிந்த விடயமே. விபத்துக்குள்ளான பிரமாண்டமான டைட்டானிக் கப்பலை மீட்க அதிக செலவாகும் என்பதால் அதனை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டதும் அறிந்ததே. கடல் அடியில் புதைந்துள்ள இக்கப்பல் துருப்பிடித்து கடல்நீரில் உள்ள வேறு பொருள்களால் அழிக்கப்பட்டும் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது. இந் நிலையிலேயே அமைரிக்காவைச் சேர்ந்த ஆல்பிரட் மெக்காரின் என்றகடலியல் ஆய்வாளர் நீரில் முழ்கிடைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்களை ஆய்வு செய்தார். அந்த ஆய்வின் பயனாக டைட்டானிக் கப்பலின் பாகங்களில் கடல்வாழ் உயிரிகள் படிந்துள்ளதாகவும், இவை ஏற்படுத்தும் பல்சிதைவு மாற்றங்களில் கப்பல் பாகங்கள் விரைவாக அழிந்து வருவதாகவும் அவர் கண்டறிந்துள்ளார். மேலும் இக்கப்பல் முழுமையாக கரைந்து அழிய 20 ஆண்டுகள் ஆகலாம் எனவும் கூறியுள்ளார். 1500 பயணிகள் உயிருடன் பலிகொண்ட Titanic கப்பலை ஆய்வு செய்த அனுபவம் மிகவும் உணர்ச்சி கரமாக இருந்தது என்று அவர் கூறியுள்ளார்.

## புதிய X ரேக் கருவி அறிமுகம்

பிரிட்டனில் உலகின் மிகச் சிறிய X ரேக் கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த நவீன சாதனம் மூலம் லண்டனில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் பதப்படுத்தப்பட்ட மம்மி சடலங்களின் உடற்பகுதிகள் படமெடுக்கப்பட்டன. இதன் மூலம் எகிப்து நாட்டு ராணியின் பதப்படுத்தப்பட்ட உடற்பாகங்கள் வெற்றிகரமாக இணைக்கப்பட்டன. வெற்றிகரமாக ராணியின் சடலம் படமெடுக்கப்பட்டதை அடுத்து பழமையான மற்றச் சடலங்களும் அடையாளம் காணப்படும் என்று கருதப்படுகிறது. 3 விநாடிகளில் உடலின் எந்தப் பாகங்கதையும் இந்தச் சாதனம் மூலம் துல்லியமாக படமெடுக்க முடியும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அகழ்வாராய்ச்சி நடைபெறும் பகுதிகளுக்கே இந்த எக்ஸ்ரேக் கருவிகளைக் கொண்டு செல்ல முடியும் என்பதால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் பாதுகாக்கப்படும் பல்வேறு மம்மிகளின் பாகத்தையும் விரைவாக இணைக்க முடியும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் விபத்தில் பாதிக்கப்படும் நோயாளிகளின் உடற்பாகங்களில் ஏற்படும் பாதிப்புகளை உடனடியாகப் படம் பிடிக்க இந்த எக்ஸ்ரேக் கருவி பயன்படும் என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

**தொகுப்பு:- பா.தர்சன்**
*யா:. ஹாட்லிக் கல்லூரி*
*பருத்தித்துறை.*

# கவிதைப் போட்டி 1

**நற்றமிழ் கவிதையாய் வெற்றிப் பரிசைப்
பற்றிக் கொள்ளும் புதுக்கவிதை**

படிக்கட்டின் இரு மருங்கும்
புதர் மண்டிக் கிடக்கிறது
பார்த்துப் போ மாடப் புறாவே
உனைப் பலி கொடுக்க
நாம் தயாரில்லை

**சகானா செல்வரட்ணம்
யாழ் நெல்லியடி
ம.ம.வித்தியாலயம்.**

## பாராட்டுப் பெறும் கவிதைகள்

இறக்கைகள் வலித்திடினும்
இளைப்பாறி மேலே செல் !
இனிய தீர்வு கண்ட பின்,
இயம்பிடுவாய் இறங்கி வந்து

பி.ஜீவனா
வல்வெட்டித்துறை

ஏழைக்குப் பசி தீர்க்கான்
கின்னஸில் இடம் என்றால்
கோபுரம் என்ன?
விண்ணுக்கும் படியும் கட்டுவான்!

S.சசிரேகா
மிருசுவில்

வெண்புறாவைப் பறக்கவிட்டு
வித்தையது காட்டிவிட்டால்
கண்காட்சி நடாத்தி விட்டால்
களியாட்டம் நிகழ்த்தி விட்டால்
பண்ணோடு பலராகம்
பாடி நடம் ஆடி விட்டால்
ஊருலகைப் பேய்க்காட்ட
அதை மீள எடுத்துவிட்டால்
மண்ணதிலே தோன்றிடுமா?
மாண்பு மிகு சமாதானம்?

p.சசி
இயக்கச்சி

கொந்தளிக்கும் கடல் மேலே
வான் உயர்ந்த படிகளில்ச் சென்று
கடவுளைக் கேட்டுடு
எமக்கு விடிவெப்போ தென்று?

ஆரூரா சதியசீலன்
கரவெட்டி.

ஓ........
வெண்புறாவே.......நீ
தாண்ட வேண்டியது
ஒரு சில படியல்ல......!
அதனால் தானோ தயங்குகிறாய்?
உன் தயக்கம் சமாதானத்தின்
முடக்கம் பேலல்லவா உள்ளது!

ஆ.அனுஷ்யா
கரணவாய் தெற்கு

*போரே வேண்டாம் எனப்*
*பொங்கி எழும் தமிழர்கள் மத்தியில்...*
*சமாதானப் புறா தன் வலுவிழந்து*
*நிற்கிறது!*
*அதிகாரம் மிக்கவர்களின் அசட்டையாலா?*

அ.தில்லை நாயகி
பொலிகண்டி

*நிலவைத் தேடி மண்ணிலிருந்து விண்ணிற்குப்*
*பாலம் அமைப்போமா - நாம் தமிழர்*
*கலகமின்றி கலக்கமின்றி வாழ்ந்திடவே*
*வானிற்கு வழி சமைப்போமா - நாம் தமிழர்*

வ.காந்திமதி நாதன்
கட்.நெ.ப.நோ.கூ.சங்கம்

*பாதைதான் தெரிந்தாலும் சமாதானம் கிடைக்கவில்லை*
*சமாதானப் புறாவே உனக்கு சமாதான வழி புரியவில்லை?*
*தெரியும் அந்தப் பாதை சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதை போலுள்ளது*
*புறாவே தனிமை என ஏங்காது பறந்து செல்! தனிமையிலும் இனிமையுண்டு.*

செ.வாசுகி
கரவெட்டி கிழக்கு

கடகட வண்டியோட கம்பியாலான பாதை
எண்ணற்ற மக்கள் ஏறிச் சென்றிட உதவும் பாதை
எவ்வளவு பாரத்தையும் ஏற்றியே சுமக்கும் பாதை
கடுகதி வேகத்திற்குக் காத்திரமான பாதை.

ந.ஜெயந்தினி
யா/வரணி மகாவித்தியாலயம்.

சமாதானப் பறவையே
நீ சமாதானத்தை எட்டிச் செல்கிறாய்
ஆனால் சமாதான மோ
மிகத் தொலைவில் உள்ளது!

யசோ

இன்னும் தரமான கவிதைகள் தந்தோர்

ம.குமணண் - கரணவாய்
த.தேவா - பொலிகண்டி
செ.சத்தியா - கரணவாய்
அ.அருந்தஷா- கரவெட்டி
அபிநயன் - கரவெட்டி
உ.வித்தியாளினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
சி.பிரேமிலா - யா.வ.ம.ம. கல்லூரி.

# பொது அறிவை அறிவோம் புது அறிவைப் பெறுவோம்

1) உலகின் முதல் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் நடை பெற்ற வருடம் எது?

கி.மு.776

2) பாலின்ட்ரோம் என்றால் என்ன?
முன்னோக்கிப் படித்தாலும் பின்னோக்கிப் படித்தாலும் ஒன்று போல் இருப்பது.

3) மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் எது?
நீலத் திமிங்கலம் - 500 வருடம்.

4) இரவும் பகலும் மிகத் துல்லியமாக வரும் நாள் எது?
மார்ச் 21

5) எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி?
ஜீங் கோ தபோய்

6) 71 பாடல்களைக் கொண்டு ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அதன் பெயர் என்ன?
இந்திரசபை

7) மரதன் ஓட்டம் பந்தயத்தின் மொத்தத்துரம் எவ்வளவு?
42.195மு.ஆ (26 மைல் 385 கஜம்)

8) விமானவிபத்தில் பலியான ஐ.நா.பொதுச் செயலர் யார்?
டாக் வேஹாமர்ஷோல்ட்.

9) ஒன்றை வருட காலத்திற்குள் 5 பிரதமர்களை நியமித்த அதிபர் யார்?

10) நேரு சார்லி சாப்ளின், ஹிட்லர் இவர்களுக்கிடையே பொதுவாக ஒரு அம்சம் காணப்படுகிறது அது என்ன?

பிறந்த வருடம் 1889.

11) ஷேக்ஸ்பியரின் படைப்புகளில் The என்பது 27457 முறை பயன்படுத்தப்பட்டது அதே போன்று இரண்டாம் நிலையைப் பெறும் சொல் என்ன?

And (26285 தடவை)

12) தனது வாழ்நாளில் சுமார் 800 ஓவியங்களை வரைந்த போதிலும் அதில் ஒன்றை மட்டுமே விற்பனை செய்த புகழ் ஓவியர் யார்?

வின்சென்ட் வான் ஹோ

13) தமிழ்க் கருவூலம் என்று போற்றப்படும் நூல் எது?

புறநானூறு

14) அண்டார்டிக்காவில் வாழும் அரிதான பறவை எது?

பெங்குயின்.

15) மூளைக் காய்ச்சலுக்குக் காரணமான உயிரி எது?

பன்றி

தொகுப்பு- ற.நிசாந்தினி
யா/வரணி மகா வித்தியாலயம்.

வாசக நெஞ்சங்களே.........

உங்களுக்குரிய களமாக விளங்கும் புதிய தரிசனத்துக்கு தரமான கதைகள், கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள் போன்றவற்றை 20.11.2003க்கு முன்னர் அனுப்பி வையுங்கள். தரமானவற்றுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# விழிபொழுது



காலக்காற்றென்னைத் துயரலையில்.......
துரும்பாக்கி யெறிந்திற்று
எண்ணங்களில் வழிந்த பிடிப்புகள்
வற்றுமளவுக்கான வன்வெய்யில் எறித்தென்னை,
வாழ்வுலகின் ஓரத்திற் சேர்த்திற்று.
கால்கள் நகர்வுற்ற திக்குகளில்........பெருநெருப்பு
கொழுந்துவிட் டெரிந்துளது.
சாபத்திற் குள்ளாகி யென்பூமி சாம்பல் மேடாயிற்று.
சமாதியாகிக்கொண்டிருக்குமென் சுவாசங்கள்...........
சுதந்திரத்துக்கான விண்ணப்பங்களோடு சேர்ந்து
பயணப்படுள்ளன.
குருதியிறைத்த மேனி கருணைபெறும் தேடலிலே.......
களைத்திற்று.
கண்களுக்குரியனவாய்...... ”சுங்கு” லை யாக்கிவைத்த,
கொடுமையினா லெந்தன் காலங்களழிந்துளது.

கரைக ளிருக்குமிடம் கண்களுக்கு எட்டவில்லை; நாள்கள்.....
நரைத்த பின்னும் தேடலிலே சுருக்கமில்லை.
பொழுதுகளின்...... புலர்வொவன்றும்,
புன்னகையை யளிக்கவில்லை.
ஏக்கத்திற் சிக்குண்டு இனிமைகளழிந்து
காத்திருப்பே வாழ்வாகிக் காலங்கள்........
கண்ணீரிற் கரையுமளவுற்கு,
” ஆதிக்கம் ” ஆட்கொண்டிருக்கிறது.

மனதேற்றுக் கொள்ளாத மாயங்க ளென்னை
மரணத்தின்...... வாசலிலே
மயக்கமுறச் செய்துளது.
நாடியடங்காக் குறையொன்றே,
இப்போதிருக்கிறது.

உயருலகின் உன்னதங்களாக வென்
உரிமைகளை மாற்றுமெண்ணம் மரிக்காதிருப்பதனால்......
"நம்பிக்கை" இன்னும் நலங்கொடுக்கிறது.
நனவுகளாய் நான் மாறும் நாளையெண்ணி
கனவுகளில்......... திளைத்துள்ளேன்.
அக்கனவின் பலிப்புக்கள்......... நிகழ்வதெப்போ?

ஏக்கங்களைக் குவித்து அதனுச்சியில்.........
ஏறிநின்றென்,
நாளைய நன்நாளைப் பார்த்திருக்கின்றேன்.
எதிர்பார்ப்போடென் பொழுதுகள்..........
உதிர்கின்றன............!

*பொலிகையூர் சு. க. சிந்துதாசன்*

கொண்டது.

நாணலின் நச்சரிப்பைக் கேட்டுக் கொண்டு நின்ற நாவல்மரம் பேசத் தொடங்கியது. ஏ..... நாணலே நீ எல்லாவற்றுக்கும் அஞ்சி அஞ்சியே வாழ்கிறாய்! ஆனால் நானோ துணிவோடு எதிர்க்கிறேன்! போராடுகிறேன்

இன்றைய போராட்டத்தில் என் கிளைகள் முறிந்திருக்கலாம்! ஆனால் என் திடம் முறியவில்லை! நாளைக்கும் புயல் காற்று வீசலாம்! நான் அப்போதும் போராடுவேன்! உன்னைப்போல் ஒளிந்து வாழ மாட்டேன்! அது எனக்கு சரியானதும் அல்ல!

என் அங்கங்கள் அழியும் வரை நான் போராடுவேன்! அழிந்தால் அழிவேன்! இருந்தால் இருப்பேன்!

என் வாழ்க்கையை வரலாறு பேசும்! ஆனால் உன் வாழ்க்கை இருந்ததாகவோ நீ இருந்ததாகவோ யாருக்கும் தெரியாது. யாரும் பேசவும் மாட்டார்கள்!

இனி மேலாவது இந்த உண்மையைப் புரிந்து கொள் என்று நாவல் கூறியதும் நாணல் நாணிக் கொண்டது. நாவல் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. அந்த நிமிர்வு ஆயிரம் ஆயிரம் அர்த்தங்களைக் கொடுத்துக் கொண்டுநின்றது.

**கவிநேசன்**

## மூக்குடைபட்ட ஐன்ஸ்டீன்

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் புகழ் பெற்ற ஒரு விஞ்ஞானி. உலகத்திலே மூளையினை அதிகமாகப் பாவித்தவர் என்ற பெருமைக்குரியவர். இந்த ஐன்ஸ்டீன் தனது வேலைப்பழு காரணமாக தனது தலைமுடியை வெட்டாது அதிகமாக வளர்த்திருந்தார். இவர் ஒரு நாள் வீதிவழியே போய் கொண்டு இருந்தார். அப்பொழுது ஒரு சிறுவன் அழுக்கான ஆடைகளுடனும் அசிங்கமானவனாய் அவ்வீதியால் சென்று கொண்டிருந்தான். ஐன்ஸ்டீன் அச்சிறுவனைக் கூப்பிட்டு தம்பி,நீ வடிவாகக் குறித்து நல்ல அழுக்கில்லாத உடுப்போடு வந்தால் 25 காசு தருவேன் என்றார். உடனே அவனும் காசுக்கு ஆசைப்பட்டு வீடு சென்று விரைவாகக் குளித்துவிட்டு நல்ல ஆடைஅணிந்து வந்தான். ஐன்ஸ்டீன் தான் கூறியவாறு காசைக் கொடுத்து விட்டு இந்த காசை என்ன செய்ய போகின்றாய்? என்றார்.அதற்கு அந்தச் சிறுவன் நீங்கள் உங்கள் தலைமுடியை வெட்டிவிட்டு வந்தால் இந்தக் காசை உங்களுக்குத் தருவேன் என்றான். ஐன்ஸ்டின் வெட்கித் தலை குனிந்து நின்றார்.

# நிமிர்வின் உன்னதம்!

காற்று ஊ ஊ என்ற இரைச்சலோடு வேகமாக வீச ஆரம்பித்தது. மரங்கள் அதன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தள்ளாட ஆரம்பித்தன. சிறிய மரங்களைக் காற்று தேவன் சங்காரம் செய்ய ஆரம்பித்தான். எங்கோ இருந்த கருமுகில் கூட்டங்களை இழுத்துக் கொண்டுவந்து தன் ஊழிக்கூத்துக்குத் துணையாக வாவென்று கட்டளையும் பிறப்பித்தான். அவையும் அவனின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டி இருக்கிறதே என்ற பயமிகுதியால் தமது கண்ணீராய் மழையை பொழிய ஆரம்பித்தன.சோவென்ற இரைச்சலோடு மழையும் காற்றும் இணைந்தால் ஓவென்று அலறியபடி உயிரினங்கள் தமது உடலை ஒடுக்கியபடி ஒதுங்கின. மரங்கள் இயலும் வரை போராடின. சிலது போராட்டத்தில் ஜெயித்தன. சிலது போராட்டத்தில் தோற்றன.

இவையெல்லாம் நடந்தேறிக் கொண்டிருக்க நாணற்புல் தனது உடலை ஒடுக்கிய படி படுத்திருந்தது. கடும் காற்றுக்கும், மழையுக்கும் அஞ்சியே அது அவ்வாறு படுத்திருந்தது.


இந்த ஊழிக்கூத்து சற்று நேரத்தில் குறைவடைந்து போக நாணல்புல் மெதுவாக நிமிர்ந்து பார்த்தது இப்போது ஒரு வித அமானுஷ்ய அமைதியின் ஆக்கிரமிப்பில் அந்த இடம் இருந்தது. தனக்குக் கொஞ்சத் தூரத்தில் நின்ற நாவல் மரத்தை சற்று ஏளனமாகப் பார்த்து ஏ....நாவலே நீ உவ்வளவு வளர்ந்தும் உனக்குக் கொஞ்சமேனும் புத்தியுண்டா? உந்தக் புயற்காற்றினையும் கொடும் மழையினையும் அனுசரித்து நிற்பதை விட்டு விட்டு போராட்டிக் கொண்டு நின்றாயே இப்போது உன் கிளை கரங்கள் முறிந்து ஊனமாகி நிற்கிறாயே உனக்கு வெட்கமில்லையா?

உருவகக் கதை


ஆனால் சிறியவன் என்னை பார்த்தாயா? அவைகளை அனுசரித்துப் போனதால் நான் தப்பித்துக் கொண்டேன்! இனியும் தப்புவேன்! ஆனால் நீ இனிப் போராடினால் அழிந்து போவாய்! ஹா.... ஹா.... என்று நாணல் இன்னும் இன்னும் சிரித்துக்

கொண்டது.

நாணலின் நச்சரிப்பைக் கேட்டுக் கொண்டு நின்ற நாவல்மரம் பேசத் தொடங்கியது. ஏ..... நாணலே நீ எல்லாவற்றுக்கும் அஞ்சி அஞ்சியே வாழ்கிறாய்! ஆனால்



# விலங்குகள் உடையும்



நிம்மதிகளின் நீள்பாதைக்கு மூடுவிழா.
கூவமுடியாத குயிலாய்நான்
நானிருக்குமிடத்தில்
வெளிப்பயணத்துக்கு கட்டுப்பாடு
கூண்டிலடைபட்ட கிளிபோலென் நிலமை
சிரித்து திக்கெட்டும் ஓடி மகிழ்வதற்கு
உறவுகளோடு நானில்லை
நாயிலும் கீழாகவே வைக்கப்பட்டிருக்கிறேன்
எத்தனையோ பேரால் துன்புறுத்தப்பட்டிருக்கிறேன்
என் போன்றோர்களை மீட்போமென
சிலர் வீர வசனம் பேசிச் சென்றார்
சென்றவர்தான் சொன்ன வார்த்தை
மறந்தே போனார்.
பொழுதுகளும் போய்க்கொண்டேயிருக்கின்றன
அழுகைகள் மனதில் சுமையேற்றுகின்றன
மொத்தத்தில் என் வாழ்வில்
தூக்குக் கயிறு போட்ட மாதிரித்தான்
தினந்தினம் செத்துக் கொண்டேயிருக்கிறேன்
சிலர் சிரித்துக் கொண்டே யிருக்கிறார்கள்
தமிழின மென்ற காரணத்தால்
தலை போகின்ற என் நிலை
அடக்குமுறைத் தீயினிலே..........................
அகப்பட்ட ஒன்றுமறியாத
அப்பாவியாகவே இருக்கிறேன்
நம்பிக்கை யொன் றிருக்கிறது
நாளை விடுதலையென்பது உண்மை
அவ் விடுதலையில் என் போன்றோரின்
விலங்குகளும் உடையும்
அந்தோ! விடுதலை யென்ற
இமயத்திற் கண்மையில் வீர உறவுகள்.

– கி.அ.தில்லைதாசன் –

# மாற்றம்



அன்று அந்தக் கிராமமே விழாக் கோலம் பூண்டிருந்தது. "பிள்ளையார் சுழி போட்டு நல்ல தெல்லாந் தொடங்கிவிடு...." என்று ஆரம்பித்து ஓயாது ஓயாது ஒலி பெருக்கி ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் தேர்தல் காலத்தில் அமைக்கப்படும் அரசியல் மேடை போல் மேடை ஒன்று. அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு காணப்பட்டது. பாடல்கள் இடையிடையே நிறுத்தப்பட்டு அன்றைய நிகழ்வுகள் அறிவிக்கப்பட்டது. மாலை 6 மணிக்கு கலியாண மண்டபம் திறக்கப்படும் எனவும் பல முக்கிய பிரமுகர்கள் வருகை தர இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. பக்தர்களும்,பக்தர்கள் போன்றவர்களும் அங்குமிங்குமாக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார்கள். ரவி அங்கு நடப்பவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு அந்தக் கிராமத்து மக்களின் பொருளாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு எல்லாவற்றையும் சிந்தித்தவாறு எமக்கு இப்படி ஓர் கலியாண மண்டபம் அவசியம் தேவைதானா? இந்த மண்டபம் எமது மக்களுக்கு நன்மையை வழங்க போகின்றதா? இதற்கு செலவு செய்யும் காசை இந்தக் கிராமத்து மக்களின் கல்விக்கும், தொழில் விருத்திக்கும் பயன்படுத்தி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். இக்கிராமத்தில் எத்தனை கல்விமான்கள் உருவாக வழி வகுத்திருக்கும். என்றெல்லாம் சிந்தித்து மனவேதனை அடைந்தாலும் இன்றைய அரசமைப்பும், சமுதாயத்தில் உள்ள சில பெரிய மனிதர்களது சிந்தனைகள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் போது தான் சிந்தித்து என்ன பயன் என்று எண்ணித் தன் மனதை ஆறுதல் படுத்திக் கொண்டு திறப்பு விழாவுக்கு வரும் மக்களிடையே தனது உயிர் காதலியான மல்லிகாவின் வரவுக்காக காத்திருந்தான் ரவி.

ரவி பல்கலைக் கழகக் கல்வியை முடித்துக் கொண்ட ஓர் பட்டதாரி ஆசிரியராகவும், மூன்று பெண் பிள்ளைகளின் அண்ணனாகவும் அவர்கள் குடும்பத்தில் மூத்த புதல்வனாகவும் விளங்கினான். மல்லிகாவும் ஓர் பட்டதாரி ஆசிரியராவே இருந்தாள். ரவியும் மல்லிகாவும் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இருவரும் ஒரு வரை ஒருவர் நேசித்தனர். மல்லிகா வசதியான குடும்பத்தில் பிறந்தவள். அவளின் எண்ணங்களையும், ஆசைகளையும் நிறைவு செய்வதற்கு பலர் காத்துக்கிடந்தனர். மல்லிகா ரவி காதல் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருந்தது.ஒருவர் இல்லை

**அருமை - அன்பு**

என்றால் மற்றவர் இல்லை என்னும் நிலையில் ஈருடல் ஓர் உயிர் என்னும் நிலையில் அவர்கள் காதல் மணம் வீசியது. ரவி இருக்கும் இடத்தில் மல்லிகாவையும், மல்லிகா இருக்கும் இடத்தில் ரவியும் சோடிப் புறாக்கள் போல் காதல் வானில் சஞ்சரித்து கொண்டிருந்தனர். ரவியின் தனிப்பட்ட வாழ்வில் குடும்ப சுமை கவலையைக் கொடுத்தாலும் மல்லிகாவைக் காணும் போதும் அவளுடன் கதைக்கும் போதும் எல்லாவற்றையும் மறந்து ஆனந்தமாக இருப்பான். ரவியின் காதல் விவகாரம் ரவியின் வீட்டிற்குத் தெரிய வர ரவியின் அப்பா கணேசன் நெருப்பாகக் கொதித்தார். "உன்னைக் கஸ்டப்பட்டு படிக்க வைத்தது மற்றவர்களைப் போல பத்து லட்சத்துக்கோ அல்லது, இருவது லட்சத்துக்கோ விற்பதற்கு அல்ல மானத்துடனும், சுய கௌரவத்துடனும் வாழ வேண்டும் என்று தான் ஆனால் நீ என்ரை மானம் மரியாதை, சுயகௌரவம் அனைத்தையும் குழி தோண்டிப் புதைக்கப்பார்க்கிறாய்" என பலவாறு பேசித்தீர்த்தார். ரவியின் வீட்டில் உள்ள மற்றவர்களும் அவர்களின் காதலை ஏற்பதாகவில்லை. அவர்கள் அப்படி ஏற்காமைக்கு காரணம் மல்லிகாவின் அப்பா சுந்தரத்துக்கும் கணேசுக்கும் இடையே உள்ள குழப்பந்தான்.

சுந்தரமும், கணேசனும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். காலத்தின் கோலத்தினால் சுந்தரத்தின் இரண்டு ஆண்பிள்ளைகளும் வெளிநாடு சென்றனர். அவர்களின் உழைப்பால் சுந்தரத்தார் உயர்ந்தார். பணம் சேரச்சேர குணம் சுந்தரத்தாரை விட்டு மெல்ல மெல்ல அகன்று கொண்டிருந்தது. அவர் ஏழைகளை எல்லாம் கோழைகள் என எண்ணிக் கொண்டார். கணேசனின் நட்பைக் கூட சுந்தரத்தார் வெறுத்தார். காலங்கள் விரைந்தோடியது. சுந்தரத்தார் வெறுக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளாத கணேசன் ஒரு நாள் மச்சான் சுந்தரம் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். என்ரை மகன் ரவிக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்திருக்கு அவனைப் படிக்கவைத்து ஓர் பட்டதாரி ஆக்குவதற்கு உன்னைத்தான் நம்பி இருக்கின்றேன் நீ தான் அவன் பல்கலைக்கழகம் செல்ல கொஞ்சப் பண உதவி செய்ய வேண்டும். என்று கணேசன் கூறிக் கொண்டிருக்கும் போதே சுந்தரம் குறுக்கிட்டு "இங்கைபாரு கணேசு நீ கேட்கிறது உனக்கே சரியா என கொஞ்சம் எண்ணிப்பார். உன்ரை பிள்ளையை நீ உழைத்துப் படிப்பிற்பதை விட்டுப் போட்டு என்னட்டைக் கேட்கின்றாய்? அது இருக்கட்டும் உனக்கு நான் காசைத் தந்திட்டு எப்படி திருப்பி வாங்குவது. நீ உழைக்கின்றது உன்ரை குடும்பச் சாப்பாட்டுக்கே போதாது பிறகு என்ன செய்கிறது. அவனைப்படிக்கவைத்து பெரிதாக என்னத்தை செய்யப் போறாய் உன்னட்டை இருக்கிற தோட்டக் காணியை விற்றுப் போட்டு அவனை வெளிநாட்டுக்கு அனுப்பு. காணி விற்கிறதாக இருந்தால் சொல்லு நான் வாங்கிறன் எனச் சுந்தரத்தார் வெளி

நாட்டுப்பணத்தினால் ஏற்பட்ட ஆணவத்தினை மெல்ல அரங்கேற்றிக் கொண்டிருந்தார். கணேசன் மௌனமாக எழுந்து சென்றார். அவர் மௌனமாகச் சென்றாலும் அவரின் மனதுக்குள் பெரும் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது. கணேசன் வீடு வந்து சேர்ந்தார். "யாரை நம்பி பிறந்தேன் போங்கடாபோங்கோ என் காலம் வெல்லும் வென்ற பின்னே வாங்கடாவாங்கோ" என்ற பாடல் யாழ் சேவையில் ஒலித்துக் கொண்டிருந்தது. அப் பாடல் எரிமலையாக வெடித்துக் கொண்டிருந்த மனதுக்கு ஓர் நம்பிக்கையை ஏற்படுத்தியது. என்னதான் கஸ்ரப்பட்டாவது ரவியை ஓர் பட்டதாரி ஆக்கித்தான் தீருவேன் என்ற உறுதியுடன் செயற்பட ஆரம்பித்தார்.

அன்று கணேசனின்' மனதில் ஏற்பட்ட பாதிப்பு இன்றும் அவர் மனதை உறுத்திக் கொண்டிருந்தது.அதன் விளைவே ரவியின் காதலுக்கு எதிப்பாக அமைந்தது. ரவியின் வீட்டில் இருந்த எதிர்ப்பு போன்றே மல்லிகாவின் வீட்டிலும் இவர்கள் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ரவி குடும்பத்தினரின் ஏழ்மை நிலை காரணமாக இரு வீட்டாரின் எதிர்ப்பின் மத்தியிலும் அவர்கள் காதல் வானில் பிரிவின்றி பறந்து கொண்டுருந்தனர். மல்லிகா இல்லாத ஒரு வாழ்க்கை இல்லை என முடிவு செய்தான் ரவி. நாள்கள் வாரங்கள் ஆகி வாரங்கள் மாதங்களாகின மாதங்கள் வருடங்களாகி ஐந்து வருடங்கள் கழிந்தன. மல்லிகா ரவியைக் கொஞ்சம் கொஞ்சமாக வெறுக்க ஆரம்பித்தாள். அன்று மல்லிகா கற்பிக்கச் செல்லும் பாடசாலைக்குச் சென்று கொண்டுருந்தாள். மல்லிகா .........மல்லிகா கொஞ்சம் நில்லு ......... என அழைத்தான் ரவி அழைப்பது கேட்டும் கேளாதவள் போன்று விரைந்தாள். அவளின் இந்த நிலைக்கு காரணம் தான் என்ன என்பதை அறியாத ரவி புழுவாகத் துடித்தான். ஊண் உறக்கம் மறந்தான். தினமும் மல்லிகாவின் வருகையை எதிர் பார்த்து அவள் செல்லும் பாடசாலை வீதியில் காத்திருப்பான். ஆனால் அவளோ அவனைக் கண்டும் காணதவள் போல் சென்று விடுவாள். அன்றும் கலியாண மண்டபத் திறப்பு விழாவுக்கு மல்லிகா வருவாள் என்ற எண்ணத்துடனே ரவி காத்திருந்தான்.

மாலை 6 மணியிருக்கும் கலியான மண்டபம் திறப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு மூலையில் வாடிய முகத்துடன் நின்று கொண்டிருந்த ரவியின் முகத்தில் சிறு புன்னகை மல்லிகா வருவதைக் கண்டதால் ஏற்பட்டது. ஆனால் அந்தப் புன்னகை மின்னல் மின்னி மறைந்தது போல் ஒரு கணப்பொழுதில் மறைந்தது. கண்கள் நீரைச் சொரிந்தன. மல்லிகா ஆம் ரவியின் உயிர் காதலி மல்லிகா யாரோ ஓர் வாலிபனுடன் கை கோர்த்து பவனி வந்து கொண்டிரந்தாள். ரவி தனது கண்களையே நம்ப முடியாத நிலையில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பார்த்தான். மல்லிகாவேதான். அங்கு நிற்க விரும்பாத ரவி தனது வீடு நோக்கி

விரைந்து கொண்டிருந்தான். "என்ன மச்சான் கொஞ்ச நாளாக ஏதோ ஒன்றைப் பறி கொடுத்தவன் போல இருக்கின்றாய் என அவன் நண்பன் சாந்தன் கேட்டதும் உம்....... மச்சான் பகட்டு மச்சான் பகட்டு இந்த உலகமே பகட்டு மச்சான். இந்த உலகிலே உண்மையான அன்பு,பாசம் இவற்றுக்கு எல்லாம் இடமில்லை மச்சான்." என்று தனது மன உணர்வுகளை வெளிப் படுத்திக் கொண்டிருந்த போதே அவனது கண்கள் அவனை அறியாது கலங்கின. "டே ரவி நீ படிச்சனி ஊர் உலகத்தை பற்றி நன்கறிந்தனி நீயே இப்படி கலங்கக் கூடாது. ரவி மல்லிகா குடும்பத்தாரின் விருப்பத்தோட வெளி நாட்டிலை வேலை செய்கின்ற பெடியனை கலியாணம் செய்ய போகின்றாளாம். பெடியன் இப்ப மல்லிகா வீட்டைத்தானாம் நிற்கின்றான். வருகின்ற 15ம் திகதி பிள்ளையார் கோயில் கலியாண மண்டபத்திலைதானாம் கலியாணம்" எனச் சாந்தன் கூறிக் கொண்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் ரவியின் இதயத்தின் உள் செல்லும் காற்றைத் தடுப்பதாக இருந்தது. மச்சான் உனக்கு நான் புத்தி சொல்ல தேவையில்லை எனக் கூறி ரவியிடமிருந்து விடை பெற்றுச் சென்றான் சாந்தன்.

ரவி நடைப்பிணமாக வாழ ஆரம்பித்தான். மல்லிகா திருமணம் முடிந்து வெளிநாட்டில் உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். ரவி திருமண பந்தமே வேண்டாம் எனத் தள்ளிவிட்டு தனது குடும்பத்துக்காக உழைத்தான். தனது உழைப்பாலும் கணேசனின் விடா முயற்சியாலும் மூன்று பெண் பிள்ளைகளையும் நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தான். தானும் கல்வித் தகமையை மிக உயர்த்திக் கொண்டான். அவ்வாறு கல்வித்தகமையை உயர்த்தி கொண்டதன் பயனாக அவர்கள் வாழும் பிரதேசத்துக்கான உதவி அரசாங்க அதிபராக நியமனம் கிடைத்தது. கணேசன் குடும்பம் நிம்மதியோடு வாழத் தொடங்கியது. கணேசனின் வீட்டில் நிம்மதியான ஓர் சூழ் நிலை உருவானது. சமாதான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலம் கட்டுக் கடங்காது விரைந்து கொண்டிருந்தது. வெளிநாடுகளில் அகதி அந்தஸ்த்து கோரியவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற நிலைபாட்டின. கீழ் சுந்தரத்தாரின் இரண்டு புதல்வர்களும் உடுத்திருந்த உடுப்புடன் மாத்திரம் வீடு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வீடு வந்து சேர்ந்ததும் சுந்தரத்தாரின் குடும்பத்தில் கல கலப்பு மறைந்து போய்க் கொண்டிருந்தது. மீண்டும் சுந்தரத்தார் உறவுகள் நட்புக்களை நாட ஆரம்பித்தார். ஒரு நாள் கார் ஒன்று வந்து திடீர் என சுந்தரத்தின் வீட்டுவாசலில் வந்து நின்றது. காரில் இருந்து எயிட்ஸ் நோய்க்கு தனது கணவரை பறி கொடுத்த மல்லிகா கைக் குழந்தையுடன் இறங்கினாள்.

முற்றும்

# இழிந்த வாழ்வு வாழ்வதேன்?


எழில்

கொட்டும் மழை தன்னில்
குளிர் தன்னில் நடுங்கி
கோடி பொன் சேர்த்துக் கொடுத்தவன்
வயிறு ஒட்டி உணவின்றி
உள்ளம் நொந்து வாழ்வதேன்?

பஞ்சில் ஆடை நெய்வதில்
பாரில் புகழ் பெற்றவன்
அஞ்சி மனம் கலங்கி
கந்தல் துணியுடன் திரிவதேன்?

பொன் அணி கலன் களினை
புதுமை மின்னச் செய்பவன்
மஞ்சள் கயிற்றை மனைவிக்கு
தாலிக் கொடியாய்க் கட்டுவதேன்?

பசுமை பொங்கும் தோப்பாக
பயிரை நாட்டி வளர்த்தவன்
பிச்சை கேட்டு மனம் நொந்து
இழிந்த வாழ்வு வாழ்வதேன்?




மலர்ந்துள்ள சமாதானம்
நிரந்தரமாக வேண்டும்
தடையின்றி வீதியிலே
நடமாட வேண்டும்
துன்பமின்றி நல்வாழ்வு
வாழ வழி வேண்டும்
அடையாள அட்டையின்றி
சுற்றிவர வேண்டும்
சிக்கலின்றிப் பள்ளிக்குச்
சென்றுவர வேண்டும்
இவையனைத்தும் நாட்டிலே
தொடர்ந்திட வேண்டும்

P.சசித்தா
கைதடி

# குறும்பன் பதில்கள்

❖யாழ் குடாநாட்டின் கல்வி வீழ்ச்சியைத் தடுக்க என்ன வழி?

யோ - பகீரதன்,மிருசுவில்

சாரமாய்ச் சொல்லப் போனா, மின்சாரத்தை இல்லாமல் பண்ணினால் பெரிய பெரிய பாரத்தை எல்லாம் இறக்கி வைச்சிட்டு நேரத்தை மிச்சப்படுத்தி இலக்கின் தூரத்தை அடையலாம். இல்லாட்டிப் போனால் கட்டி சாரத்தைக் கொண்டு பெடியங்கள் எல்லாம் சந்தி வழியே மந்திபோல குந்தி இருக்க வேண்டியதுதான். பெட்டப் பெடியள் வேளைக்கு மணவறையில் குந்தியிருந்து கழுத்தை நீட்டவேண்டியதுதான்.

❖தமிழுக்கு அமுதென்று பேர், யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாரததேசக் கவிஞர்கள் புகழ்ந்ததையே நாமும் சொல்கிறோமே? நமது ஈழக்கவிஞர்கள் அவ்வாறு புகழ வில்லையா?

ம.பிரசாத்

நெல்லியடி.ம.ம.வி

❖யார் சொன்னது புகழவில்லையென்று? க.சச்சிதானந்தம் அவர்கள் எழுதிய "சாகும் போதும் தமிழ் படித்தே சாக வேண்டும்" என்று தொடரும் கவிவரிகளை அறியவில்லையா?
உணர்ச்சி கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் தமிழ் மொழியின் மீதான அதி பற்றால் எழுதிய

" பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
அவன் தலை கொண்டு வாடா
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்
அது நமக்குணவாகும் போடா " என்ற கவிவரிகளையும் நீர் அறிந்ததில்லையா? (ஈழத்துக் கவிஞர்கள் எல்லோரும் தமிழை புகழ்ந்துள்ளனர் என்பதை அறிக)

❖குறும்பனே, யாழ்குடா நாட்டிலே வருகின்ற பத்திரிகைகளிலே உமக்குப் பிடித்த பத்திரிகை எது?

இ-டினேஸ்-
சாவகச்சேரி

❖யாழ் மண்ணிலே "உதயமாகி தினமும் வலம்புரி" செய்து "நமது ஈழநாட்டு"க்காக எந்தப் பத்திரிகை "தினமும் குரல்" கொடுக்கிறதோ அதுவே எனக்குப் பிடித்த பத்திரிகை.

❖பெண்களின் நடை அன்னநடை என்றால் ஆண்களின் நடை?

கு.கார்த்தீபன்
பொலிகையூர்

❖கார்த்தீபா! இதற்கு விடை, யானை நடை என்று நான் சொல்ல வில்லைக் கம்பராமாயணம் சொல்கிறது.காட்டில் வழி நடந்த இராமனும் சீதையும் கோதாவரியாற்றைங் கரையை அடைந்த போது அங்கே ஓர் அன்னம் ஒதுங்கி நடந்து சென்றது. அன்ன நடையை இராமன் சீதையின் நடையோடு ஒப்பிடுகின்றான். அந்த வேளையிலே ஆற்றிலே தண்ணீர் குடித்து விட்டு ஒரு யானைக்குட்டி ஒரு புறமாக நடந்து செல்கிறது. அதை நோக்கிய சீதை அதனின் அதன் நடையை இராமனின் நடையோடு ஒப்பிட்டு இன்புறுகிறாள்.

**இதைக் கம்பர்,**

*ஓதிமம் ஒதுங்கக் கண்ட*
*உத்தமன் உழையளாகும்*
*சீதை தன் நடையை நோக்கில்*
*சிறியதோர் முறுவல் செய்தான்*
*மாதவள் தானும் ஆண்டு*
*வந்து நீர் உண்டு மீளும்*
*போெதகம் நடப்ப நோக்கிப்*
*புதியதோர் முறுவல் பூத்தாள்.*

# உனக்கும் எனக்கும் மார்பு பொருமி வளர்ந்த கதையில்.......................

-இராகவன்-

ஊட்டு இளவரசா!
வீரியத்தோடு விறைத்து நிற்கும்
உன் முலைக்காம்பு
தாவித் தாவி தவறிவிழுந்த
குரங்குப் பொடிக்கு
வயிறு முட்ட ஊட்டு
உனக்கும் புது ஊற்று
பொடியும் புது நாற்று
மகாவம்சம் ஒவ்வொரு பக்கமும்.
சொல்கிறது கேட்டாயோ?
பாலூட்டி வளர்க்கட்டாம்
தாவித்தாவி தவறி விழுந்த
குரங்கு பொடிக்கு
வயிறு முட்ட ஊட்டட்டாம்
காம்பு நம் குறிபோல்
விறைத்து நிற்க வேணுமாம்
உனக்கும் எனக்கும் மார்புபொருமி
வளர்ந்த கதை
மகாவம்சத்தின் ஏதேனுமொரு பக்கத்தில்
வாசம் கமழ எழுத்துப்பதிவிருக்கும்
பரிசு விளக்கேற்றி நான் பார்த்திருக்க
குரங்குப் பொடிக்கு நீ முலைப்பாலை
ஊட்டுகிறாய்
நானும் ஊட்ட ஒரு குரங்குப் பொடிவேணும்
இளவரசி வந்தாலும்
புலன் அலையாதிருந்து ஊட்டு!



இப்படத்திற்குரிய கவிதையே இது

# வாசகர் தரிசனத்தில்..................

பொலிகண்டி
4.8.2003

ஆசிரியர் அவர்களுக்கு,

புதிய தரிசனம் முதலாவது இதழ் வாசித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இன்றைய இளைய சமுதாயம் சீரழியாமல் **"வாசிப்பதே சுவாசிப்பு"** என்ற தன்மை ஏற்பட வேண்டும் என்ற தங்கள் தலையங்கம் வெகு அருமை. அதே போன்று அனைத்துக் கவிதைகளும் திரும்பத் திரும்பத் வாசித்து இரசிக்கக் கூடியதாக உள்ளது. **"உலகை நம்பியல்ல" - உத்தமரை நம்பி"** என்ற வரிகள் மறக்க முடியாதவை. மற்றும் எல்லா ஆக்கங்களும் நன்றாக அமைந்துள்ளன.

எங்கள் சொந்த மண்ணில் உருவாகும், உருவாக்கப்படும் சஞ்சிகைளை ஊக்குவிக்க அனைவரும் முனைப்புக் காட்ட வேண்டும். உண்மையில் " புதிய தரிசனம் " ஒரு சிறந்த கலை, இலக்கிய, சமூக, அறிவியல் சஞ்சிகையாக சமுதாயத்தை நல் வழியில் இட்டுச் செல்லும். தொடர்ந்தும் வாசகர்களாகிய எங்களுக்கு நல்ல ஆக்கங்களை நல்ல கருத்துக்களை தரிசிக்கத் தருமாறு வாழ்த்துகிறேன்.

திருமதி.V.வசந்தா

யூலையிலே தரிசனம் தந்த புதிய தரிசனமே
உன் ஆக்கங்கள் இன்னும் பொலிவுற வாழ்த்துக்கள்.

செ.வாசுகி,கரவெட்டி.

புதிய தரிசனமே எமக்குத் தரிசனம் தரவே
புதிய உருவில் வெளி வந்தாயே
இளம் எழுத்தாளரை உருவாக்கும் உந்தன்
பாரிய முயற்ச்சிக்கு வாழ்த்துக்கள் பல கோடி!

உன் அடுத்த இதழுக்காய்
வழி மீது விழி வைத்துக் காத்திருக்கிறோம்!

பா.பவித்திரா
தரம்9யு
யா.வடமராட்சி.ம.ம.கல்லூரி

புதிய தரிசனம் சஞ்சிகையைப் படித்ததில் வாழ்த்துக்களை வாரியிறைக்க வேண்டும் போல் இருந்தது. என்றாலும் வாழ்த்துக்கள் உருபுறம் இருக்க சில சிந்தனைகளையும் சொல்லலாம் என இருக்கிறேன்.

1) விளையாட்டுலகம் என்றொரு பகுதியை ஆரம்பித்து சகல விளையாட்டுக்கள் சம்மந்தமான கட்டுரைகளைப் பிரசுரித்தல்
2) மங்கையர்களுக்கும் 1 பக்கம் ஏனும் ஒதுக்குதல்.
3) நகைச்சுவைப் பகுதியைத் தருதல்
4) மருந்துவம் சம்பந்தமான குறிப்புக்கள் கட்டுரைகள் வழங்கல்.
5) விஞ்ஞான விந்தைகள் பற்றிய விபரிப்புக் கட்டுரைகள்

போன்றவற்றையும் இனிவரும் இதழ்களில் புதிய தரிசனத்த்தில் தரிசிக்கத் தரவேண்டும் என்று அன்பாக வேண்டுகிறேன்.

பாலவினோத்

## முடிமன்னரின் முடிவின் முடிச்சவிழ்கிறதா?

✪பிரெஞ்சு சக்கரவர்த்தியாக இருந்த நெப்போலியனின் சாவைக் குறித்துப் பல சர்ச்சைகளும் கருத்துகளும் உண்டு. அந்த வகையிலே செயிண்ட் ஹெலினா தீவில் சிறைவைக்கப் படடிருந்த போது உணவில் ஆசனிக்(As) விஷம் கொடுக்கப்பட்டது என்பது ஒரு கருத்து.

நெப்போலியனின் மருத்துவர்களோ வயிற்றுக் கான்சரே சாவிற்குக் காரணம் என்றனர்.

நெப்போலியனின் தலைமுடியை ஆராய்ந்த சமீபத்திய அறிவியல் அறிக்கை ஒன்று அதில் As விஷம் இருப்பதை உறுதி செய்த போதிலும் ஆளை ஒரேயடியாகக் கொல்லும் அளவிற்கு அதில் விஷம் இல்லை என்கிறது. எனவே மெல்லச் சாகும் விதத்தில் உணவில் As விஷம் பலகாலமாகத் தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.


### மோப்பத்தை உணரும் மூக்கு

✪காற்று வீசும் திசைக்கு எதிராக தனது மூக்கு இருக்கும் படியாகவே நாய் எப்போதும் படுக்கும் மோப்பத்தினால் உணரவே இவ்வாறு செய்கின்றது.

### புதுமையாய் ஓர் ஓட்டப்பந்தயம்

✪ஸ்பானிய நகரான லோகோலேனோயில் ஒரு மீட்டர் 20 சதம மீற்றர் தூரத்திற்கு ஐந்து நிமிட நேரத்திற்கு ஓர் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. என்ன வாசகர்களே இவ்வளவு குறைந்த தூர ஓட்டப் பந்தயம் என வியக்கிறீர்களா? போட்டி நத்தைகளுக்குத்தான்.

# குறுக்கெழுத்து போட்டி ❷



இடமிருந்து வலம்:-

1) ஆலயங்களில் அதிகாலையில் ஒலிப்பது.
6) உடலில் காணப்படும் ஒரு தொகுதி.
7) நாட்டு என்பதை குறிக்கும்.
8) பெருமை
9) பத்துப் பாடல் கொண்ட தொகுதி.
11) மந்திரசித்து வேலையில் படமாக கீறுவது.
12) இராசிகளில் ஒன்று
15) கழிவகற்றும் உறுப்பு
17) நகைச்சுவையாய் கவிபுனைபவன்.
18) வெடி ஓசையைக் குறிக்கும்.
19) யானை குதிரை போன்றவற்றை ஓட்டுபவர்

மேலிருந்து கீழ்

1) கடினமானவை என்பதன் எதிர்பதம்.
2) மற்றவர் அறியாமல் பாதுகாக்க வேண்டியது.
3) கம்பராமாயணக் காண்டங்களில் ஒன்று.
(பண்டித தரப்படுத்தலில் ஒன்றாகவும் அமையும்)
4) கணவன் மனைவி இருவரையும் இணைத்துக் கூறுவது.
7) வெட்டவெட்ட மீண்டும் வளரும்
(தலைமுடி அல்ல)
10) ஆவியாகக் கூடியது. திடமான வடிவம் அற்றது.
13) புத்திசாலித்தனமாக இலகுவாக செய்வது.
14) படிப்பறிவில்லாதவன்.
15) இராமனின் நண்பன்(வேடுவத்தலைவர்)
16) துன்பப்படு என்ற பொருளில் வரும்
17) தவிர் என்ற பொருளில் வரும்.
18) இணையானது கற்க கசடற என்று தொடங்கும் திருக்குறளின் இறுதிச் சொல்)

## புதிய தரிசன குறுக்கெழுத்துப் போட்டி 1

முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்
முடிவுகள்



கவிதைப் போட்டி 1 ற்குரிய கவிதைகள் இவ் இதழில் வெளியாகி உள்ளன. அக் கவிதைகளுக்குரிய படமானது அதில் இடம் பெறவில்லை அவ் படமே இதுவாகும்.

புதிய தரிசனத்தின் அன்பு வாசகர்களே!...........நீங்கள் புதிய தரிசனத்தின் சந்தாகாரராகி எங்கள் கரங்களுக்கு இன்னும் உரம் சேருங்கள்.

**சந்தா விபரம்**

ஆறு இதழ்கள் - 140/=

மூன்று இதழ்கள்- 70/= (தபால் செலவு உட்பட)

காசுக்கட்டளைகளை அனுப்புவோர்
த.அஜந்தகுமார் என்ற பெயருக்கு கரவெட்டி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

"புதிய தரிசனம் என்றும் தரிசனம் தர
வாழ்த்துகின்றோம்."




அச்சுக்கலை உலகின் நாயகர்
என்று மெச்சும் வகை
உச்சாரத்தில் நின்று
உயர் சேவையாற்றுவோர்

**VINAYAGAR PRINTERS**

**விநாயகர் அச்சகம்**

பருத்தித்துறை.

புதியதரிசனம்
வாழ்க!!



சகல விதமான துவிச்சக்கர வண்டி வகைகளும்,
உதிரிப் பாகங்களும், பாதணி வகைகளையும்
புதிய இடத்தில் பெற்றுக் கொள்ள

**கௌரி மிதிவண்டி வாணிபம்**

பருத்தித்துறை வீதி

நெல்லியடி.

' 'புதிய தரிசனம் என்றும் நிலைக்க வாழ்த்துகின்றோம்.' '

பல்பொருட் சாமான்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளும் வகையில் நிறைவான சேவை செய்வோர்..........
தொலைத்தொடர்பு சேவையினை உடனுக்குடன் பெற்றுத்தரும் சேவை செய்வோர்.....

# திசா களஞ்சியம்

பிரதான வீதி

நெல்லியடி.



புதிய தரிசனம் சஞ்சிகை இன்னும் இன்னும் மெருகேறி மேன்மை நிலையடைந்து எங்கும் தரிசனம் தந்து பொங்கிப் பிரவகிக்க வாழ்த்துகின்றோம்.

# செல்லமுத்தூஸ் புடவை மாளிகை

பிரதான வீதி,

நெல்லியடி.


கோயில் திருவிழாக்களா?


திருமண விழாக்களா?

பூப்புனித நீராட்டு விழாக்களா?

இன்னும்

வேறெந்த விழாக்களாக இருந்தாலும்
தரமான ஒலியமைப்புச் சேவையில்
உயர் பணியாற்றும்
உன்னத நிறுவனம்





# தரன் சவுண்ட்ஸ் சேவிஸ்

பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி.

வாசிப்பே சுவாசிப்பு
என்ற சிந்தனைக்கு
உயிரூட்டும்
உன்னதமான நிறுவனம்
நூல்வெளியீடுகளை
அறிமுகங்களைச் செய்து
எழுத்தாளரை ஊக்குவிக்கும்
ஏற்றமுறு நிறுவனம்
புலமைப் பரிசில்களை வழங்கி
மாணவர்களை
ஊக்குவிக்கும் உயர்நிறுவனம்

கட்டைவேலி
நெல்லியடி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
கலாச்சாரக் கூட்டுறவுப் பெருமன்றம்

தொலைபேசி 021-3263

தமிழ் பூங்கா (மல்ரி ஓவ்செற) பதிப்பகம், நெல்லியடி.